# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 05 செவ்வாய்க்கிழமை (19-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:205




நேற்று யாழ். வந்துசேர்ந்த தென்னிலங்கை சர்வமதக் குழுவில் அங்கம் வகிக்கும் பௌத்த தேரர்களையும் முஸ்லிம் மதப்பிரதிநிதியையும் படங்களில் காணலாம். (மேலும் படங்கள் 12ஆம் பக்கத்தில்)
(படங்கள்: றோய் மதிவதனன்)

## யாழ். வந்த சர்வமதக் குழுவினர் தெரிவிப்பு:

# தெற்கு மக்களின் விருப்பமும் பேச்சு மூலம் தீர்வு காண்பதே!

## பிரேரணை இன்று சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜூன்19

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.கட்சி இன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் சமர்ப்பிக்க இருக்கின்றது.

இந்தப பிரேரணையில் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் கையொப்பமிட்டுள்ளனர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனைய எதிர்க்கட்சிகள் சிலவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கையொப்பமிட்டுள்ளதாகக் கூறப்பட்டபோதும், அவை தொடர்பான விபரங்கள் வெளியாகவில்லை.

இந்தப் பிரேரணை கையளிப்பதை ஒட்டி இன்று தெற்கில் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற இருக்கின்றன. (ஐ-3)

## 95 சத வீதமானோர் போரை வெறுக்கின்றனர்

யாழ்பாணம்,ஜூன்19

**தமிழ் மக்களின் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது தெற்கில் 95 சதவீதமான மக்கள் யுத்தத்தை வெறுக்கின்றனர். சமாதானப் பேச்சு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணமே தெற்கில் உருவாகி வருகிறது.**

**தென்னிலங்கையில் இருந்து யாழ்.வந்துள்ள சர்வமதக் குழுவில் அங்கம் வகிக்கும் பேராசிரியர் வண. கும்புறுவேவ வஜிரதேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் சர்வமதக் குழுவினர் நடத்திய கலந்துரையாடலிலேயே தேரர் இப்படிக் கூறினார்.

யாழ்.ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பிரதிநிதிகளை மதக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

டாக்டர் வை.தியாகராசா மதக் குழுவினரை வரவேற்றார். அடுத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## 15 பிரதிநிதிகள் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,ஜூன்19

இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சின ஏற்பாட்டில் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு தென்னிலங்கையைச் சேர்ந்த சர்வமதக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

நேற்று நண்பகல் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த இக்குழுவினரை யாழ்.செயலக அதிகாரிகள் அங்கு வரவேற்றனர்.

இந்தக் குழுவில் ஒன்பது பௌத்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் வருகிறது

திருகோணமலை,ஜூன்19

திருகோணமலையிலிருந்து 400 பயணிகளுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நேற்று காங்கேசன்துறை நோக்கி புறப்பட்டதாக திருமலை பிரதேச செயலகம் தெரிவித்தது.

இதேவேளை - கப்பலில் பயணம் செய்வதற்காக ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகள் திருமலையில் தவம் கிடப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஐ-3)

## எங்கும் செல்வோம்! எதிலும் வெல்வோம்!!

### கிழக்கில் புலிகளின் வாசகங்கள்

மட்டக்களப்பு,ஜூன்19

இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் பல இடங்களில் சுவர்களில் பிரமாண்டமான



அளவில 'ஸ்பிறே பெயின்டிங்' மூலம் வரையப்பட்டுள்ள "எங்கும் செல்வோம்; எதிலும் வெல்வோம்! விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் படையணி" என்ற வாசகங்கள் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த மாத முற்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சில இடங்களிலும் இதே வாசகங்கள் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. சில இடங்களில் கைகளால் சிறிய அளவில் அவை வரையப்பட்டிருந்தன. ஆனால் தற்போது கட்டடங்களின் சுவர்களிலும், பஸ் தரிப்பிடங்களிலும் 'ஸ்பிரே பெயின்டிங்'

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுக்கு பிக்குமார் எதிர்ப்பு என்ற எண்ணத்தை நீக்க முயலுங்கள்!

### சர்வமதக் குழுவிடம் ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூன்19

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் விடயத்தில் பௌத்த தேரர்கள் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர். தமிழ் மக்கள் மனங்களில் உள்ள அத்தகைய எண்ணத்தை நீக்க, பௌத்த பிக்குகள் முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த பிக்குமார் அடங்கிய சர்வமதக் குழுவினரிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் யாழ்.ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம்.

சர்வமதக் குழுவினர் பங்குபற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடை எரிப்பு! திரை அரங்கில் அடிதடி!!

# லண்டனில் தமிழ் இளைஞர்கள் அணி பிரிந்து கோஷ்டி மோதல்!

### அரியாலை வாலிபர் பலி! மூவர் நிலை கவலைக்கிடம்

லண்டனிலிருந்து சிறப்புச் செய்தியாளர்

லண்டன்,ஜூன்19

வடமேற்கு லண்டனில் ஈலிங் பகுதியில் இலங்கைத் தமிழ் இளைஞர் குழுக்கள் இரண்டிற்கிடையே மூண்ட கோஷ்டி மோதலில் ஒருவர் பலியானார்; மூவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அங்கு அரியாலை மற்றும் மன்னார் பிரதேச இளைஞர் குழுக்களுக்கிடையே கடந்த சில வார காலமாக இடம்பெற்று வந்த தொடர்ச்சியான மோதல்களின் உச்சக்கட்டமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

ஈலிங் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிறு இரவு 9.30 மணியளவில் கார் தரிப்பிடம் ஒன்றில் காருடன் தங்கி நின்ற இளைஞர் குழுவினர் மீது அங்கு மற்றொரு காரில் வந்த இளைஞர்கள் தாக்கிய வேளை இரு சாராரிடையேயும் கடும் மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. பலத்த தாக்குதலுக்கு இலக்கான அரவிந்தன் முத்துக்குமாரசாமி என்ற 25 வயது இளைஞர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்தார்; அரியாலை திருமகள் வீதியைச் சொந்த இடமாகக் கொண்ட இந்த இளைஞர் கடந்த ஐந்து வருட காலமாக லண்டனில் வசித்து வந்தார். இவருடன் படுகாயமடைந்த வேறு மூன்று இளைஞர்களும் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களின் பெயர் விவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முடுக்கிவிட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுடன் ஹக்கீம் பல சுற்றுப் பேச்சு?

கொழும்பு,ஜூன்19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே முறுகல் நிலை வலுத்து வரும் அதேசமயம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த இரு தினங்களாக இரு தலைவர்களும் உத்தியோகப்பற்றற்ற முறையில் கலந்துரையாடி வருவதாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சுத்திகரிப்புத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் நேற்று முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன்19

ஆறு அம்சக் கோரிக்கைகளை முன வைத்து யாழ்மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கடந்த சனிக்கிழமை முதல் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

ஊழியர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக மாநகரசபை அதிகாரிகள் உறுதி அளித்ததை அடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான வேலைநிறுத்தப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் நடை பெற்றது. நேற்றுக்காலை மாநகர சபை அலுவலகத்துக்கு முன்பாகக் கூடிய சுமார் 150 சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அவ்விடத்தில் அமர்ந்திருந்தவாறு தமது போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மாநகரசபையின அலுவலகத்தில் பிரதி மேயர் செ.கந்தையன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதனையடுத்து தொழிலாளர்கள் முன்வைத்த ஆறு கோரிக்கைகளில் ஒன்றான தொழிலாளர்களின் நலன் பேணப்படவேண்டும் என்ற கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனைய 5 கோரிக்கைகள் பற்றி எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள மாநகரசபையின் கூட்டத்தில் ஆராய்ந்து மாநகரசபையின் அதிகாரத்துக்குட்பட்ட விடயங்களைச் செயல்படுத்துவது எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயங்கள் பற்றி தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டதை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. இன்று முதல் மீண்டும் அவர்கள் தமது கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் மாநகரசபையின் உறுப்பினர்களான ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி)வைச் சேர்ந்த த.சுபத்திரன், ம.மங்களநேசன், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த செல்லையா விஜயரட்ணம், புளொட்டைச் சேர்ந்த மு.தவநாதன், ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த மா.கனகரட்ணம், மோகன் எட்வேட், து.றீகன் ஆகியோருடன் மாநகரசபை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

மாநகரசபையினால் நேற்று நடத்தப்பட்ட பதில் சுகாதாரத் தொழிலாளர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் 30 பேர் தோற்றினர். (ஐ-10)



ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது சுலோகங்களைத் தாங்கியவாறு மாநகரசபை அலுவலகத்தின் முன்பாகத் தொழிலாளர்கள் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம். (ஐ-10) *படங்கள்:- கொனிகா கலர்லாப்.*

# பிரபாகரனையும் போராளிகளையும் குடிசன மதிப்பீட்டில் சேர்ப்பீர்களா?

## ஜனாதிபதிக்கு அஸ்வர் எம்.பி. கடிதம்

கொழும்பு,ஜூன்19

குடிசன மதிப்பீட்டில் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சேர்த்துக் கொள்ளமாட்டீர்களா? அவரும் இலங்கைப் பிரஜைதானே. அவரையும் அவரது போராளிகளையும் சேர்த்துக்கொள்ளாத குடிசன மதிப்பீடு உண்மையான சனத்தொகை மதிப்பீடாக இருக்குமா?

இவ்வாறு ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கேள்வி எழுப்பியுள்ளார் ஐ.தே.கட்சி எம்.பி. ஏ.எச்.எம்.அஸ்வர்.

அந்தக் கடிதத்தில் அஸ்வர் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் யுத்த சூழ்நிலை காரணமாக அமைதியற்ற நிலையிலும் லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்த நிலையிலும் இருக்கின்றனர். அந்தப் பகுதிகளில் குடிசன மதிப்பீட்டை எடுப்பது தற்போதைய நிலையில் சிறுபான்மை மக்கள் மத்தியில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும்.

வடக்கு - கிழக்கிலிருந்து 4 லட்சம் பேருக்கு மேல் யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். வடக்கிலிருந்து 75 ஆயிரம் முஸ்லிம்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

இந்த நிலையில் குடிசன மதிப்பீட்டை மேற்கொண்டால் வடக்கு - கிழக்கின் உண்மையான நிலையை அது புலப்படுத்த மாட்டாது.

சிறுபான்மை மக்களின் சனத்தொகையை குறைத்துக் காண்பதற்காகவே இந்த சூழ்நிலையில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. இது ஒரு திட்டமிட்ட சூழ்ச்சியாகும்.

சிஹல உறுமயத் தலைவராக இருந்த திலக் கருணாரத்ன அண்மையில் நாடாளுமன்றத்தில் பிரியாவிடை உரை நிகழ்த்தும்போது தற்போதைய குடிசன மதிப்பீட்டை அடுத்து பெரும்பான்மை மக்களின் தொகை 72 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக அதிகரிக்கும் என்று ஆருடம் கூறியுள்ளார்.

இதனை அவர் எப்படிக் கூறுவார்? இதிலிருந்தே பெரும்பான்மை எண்ணிக்கையை அதிகரிக்க சூழ்ச்சி நடைபெறுவதாகத் தெரிகிறது.

- என்று அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (க-7)

# துன்னாலை பானுதோட்ட அகதிமுகாம் எரிந்து நாசம்

## மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

யாழ்ப்பாணம்,ஜூன்19

இரவு 7 மணிக்கு சமைத்துக் கொண்டிருந்த வேளை திடீரெனப் பற்றிய நெருப்பினால், அகதிகள் முகாமில் ஒன்று தீப்பற்றி எரிந்து முற்றாக நாசமடைந்தது.

கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில், தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தினால் துன்னாலை பானுதோட்டம் பகுதியில அமைத்துக் கொடுக்கப்பட்ட 14 முகாம்களில் ஒன்றே எரிந்து நாசமானது.

தீப்பற்றிக் கொண்டதை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்த, இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கப் பருத்தித்துறைக் கிளைத் தீயணைக்கும் பிரிவினர் ஏனைய முகாம்களிலும் தீ பரவாது தடுத்து அணைத்தனர்.

தற்போது இக்குடும்பத்தினரின் எரிந்துபோன பாவனைப் பொருளகளுக்குப் பதிலாக புதிய பாவனைப் பொருள்களை வழங்க செஞ்சிலுவைசங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இக் குடிசையை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலருடன், செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளைத் தலைவர் சு.தவராசா நேற்று முனதினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

வடமராட்சி, தும்பளைப் பகுதியில் அமைக்கப்பட்ட தொடர் முகாம் ஒன்று கடந்த முதலாம் திகதி விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டு, முற்றாக எரிந்து நாசமானதும் தெரிந்ததே.

(க-15)

### மாட்டிறைச்சி விலை குறைப்பு

தென்மராட்சி,ஜூன்19

வடமராட்சிப் பகுதியில் கோவில் சந்தை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் மாட்டிறைச்சி, ஈரல் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் இறைச்சியின் விலை கிலோவுக்கு பத்து ரூபாவும் ஈரல் கிலோவுக்கு 40 ரூபாவும் குறைக்கப்படும் என்று அவாகள் அறிவித்துள்ளனர். (க-117)

### குளவிகளால் தாக்கப்பட்ட வயோதிபர்

நுங்கு எடுத்துக் கொண்டிருந்த வேளையில், வீழ்ந்த பனையோலைக் குள்ளிருந்து வெளியே வந்த குளவிகளால் தாக்கப்பட்ட வயோதிபர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் புலோலி கிழக்கைச் சேர்ந்த கந்தையா சங்கரப்பிள்ளை (வயது72) என்பவரே குளவிகளால் தாக்கப்பட்டவராவார்.

(க-117)

### 20 ஆயிரம் மாணவர் ஒப்பமிட்டு மகஜர்

கொழும்பு,ஜூன்19

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் ஆங்கில மொழிமூலக் கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென் பகுதியைச் சேர்ந்த 20 ஆயிரம் மாணவர்கள் ஒப்பமிட்ட மகஜர் ஒன்று இசுருபாயவில் உள்ள கல்வித் திணைக்கள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

(ஐ-4)

### சைக்கிள் திருட்டு

அச்சுவேலி,ஜூன்19

அச்சுவேலி தம்பாலைப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் முற்றத்தில் பூட்டாத நிலையில் நிறுத்தப்பட்டிருந்த 'லுமாலா' சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வீட்டில் உள்ளவர்கள் உணவருந்திக்கொண்டிருந்த சமயம் திருடப்பட்டுள்ளது.

(ஐ-ஒ-6)

### திருக்குறள் மனனப் போட்டி

காரைநகர்,ஜூன்19

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபை பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் திருக்குறள் மனனப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இப்போட்டிகள் காரைநகரைச் சேர்ந்த அமரர்கள் கந்தையா வள்ளியம்மை ஞாபகார்த்தமாக நடத்தப்பட இருப்பதாக வாரிவளவு நல்லியக்க சபை செயலர் ச.பத்மநாதன் தெரிவித்தார்.

(ஐ-73)

### விமானப்படை சிப்பாய் தற்கொலை முயற்சி

காதலியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தால் மனமுடைந்த விமானப்படையின் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டார்.

விமானப்படைப் பொலீஸ் பிரிவில் 10 வருட காலமாகக் கடமையாற்றி வந்த அவர், விமானப்படை நிர்வாகப் பிரிவில் பணியாற்றும் ஒரு பெண்ணை காதலித்து வந்ததாகவும் -

சம்பவதினம் அந்தப்பெண்ணுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக அவர் மனமுடைந்திருந்ததாகவும் -

அதனையடுத்து காதலியை அவரது அலுவலகத்தில் இருந்து வெளியே இழுத்து வந்து, அவர் முன்பாக தன்னைத்தானே சுட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# இசைக் கருவிகள் கொள்வனவுக்கு நெடுந்தீவுக் கழகத்திற்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஜூன்19

நெடுந்தீவு இளைஞர் இன்னிசைக் கழகத்துக்கான இசைக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கென வடக்கு-கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ரூபா 5 ஆயிரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேற்படி நிதியைப் பயன்படுத்தி மிருதங்கம், கைத்தாளம் என்பன கொள்வனவு செய்யப்படவுள்ளன.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்தின் வழிப்படுத்தலில் நெடுந்தீவுக்கான கலாசார உத்தியோகத்தர் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு இந்த நிதியைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

(க-7)

## சப்பிரகமுவ பிரதேசத்தில்

# சின்னம்மை நோய் அபாயம்; பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு,ஜூன்19

சப்பிரகமுவ பிரதேசத்தில் திடீரெனப் பரவிய சின்னம்மை நோய் காரணமாக சப்பிரகமுவ பல்கலைக் கழகம் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக சமூகத்தைச் சார்ந்தவர்களும் அந்தப்பகுதியில் ஏற்பட்ட சின்னம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நோய் மேலும் பரவுவதைத் தடுப்பதற்காக அப்பகுதி சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

(ஐ-4)

"முயற்சி"
அகதிகள் புனர்வாழ்வு நிறுவன
திறன் விருத்திமையம்
விண்ணப்பம் கோரல்

புத்தகம் கட்டுதல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:- 07-07-2001

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-
செயலாளர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C/17148)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு
ஒரு நற்செய்தி!
உங்கள் DISSERTATION BOOK
கம்பியூட்டர் மூலம் சிறந்த முறையில்
குறைந்த செலவில் TYPING செய்து
பெற்றுக்கொள்ள உங்கள்
DISSERTATION இலவசமாக FLOPPY
DISKET இல் பதித்துத் தரப்படும்.
உடன் நாடுங்கள்.



SRI MURUGAN
Computer Systems, Communication Services.
&
AGENCY POST OFFICE

T.P. : 021-2670, 021-3588
FAX: 021-3214
e.mail: del-smker@evreka.lk
303, K.K.S. Road, Jaffna.

(C/17145)

## தூதரகத்தைத் தாக்க முயன்றவர்களை ஒப்படைக்கக் கோரிக்கை!

வாஷிங்டன்,ஜூன்19

டில்லியில் உள்ள இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதரகத்துக்குக் குண்டு வைக்க முயன்றதாகக் கூறி இந்தியப் பொலீஸார் கைது செய்துள்ள மூவர் தொடர்பான விரிவான விசாரணை அறிக்கையை அமெரிக்கா கோரியுள்ளது.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் மேற்படி கோரிக்கை தொடர்பாகக் கூறினார்.

கைது செய்யப்பட்ட மூவரும் சர்வதேசத் தீவிரவாதி ஒருவர் பின்லேடனினால் அனுப்பப்பட்டவர்கள் என இந்தியப் பொலீஸார் தெரிவித்திருந்தனர்.

பிரஸ்தாப தீவிரவாதிகள் ஆறு கிலோ ஆர்.டி.எஸ் குண்டினை கார் ஒன்றினுள் வைத்துத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருந்தனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதனை அடுத்தே அமெரிக்கா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. மூவர் தொடர்பான கூடுதல் விவரங்களையும் இந்தியாவிடம் கோரியதாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆளுங்கட்சி அலுவலகம் மீதான
# குண்டுத் தாக்குதலை அடுத்து பங்களாதேஷில் பெரும் குழப்பம்
## பல இடங்களில் தீ வைப்புச் சம்பவங்கள்

டாக்கா,ஜூன்19

பங்களாதேஷில் ஆளும் அவாமி லீக்கின் பிரதேச அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து நாட்டில் தொடர்ச்சியான குழப்பங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே ஊர்வலங்களை நடத்திவருவதுடன் வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தலைநகர் டாக்காவின் பல இடங்களிலும் தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சி அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் சேதம் பற்றி அறிவிக்கப்படவில்லை.

தேசியக் கட்சித் தலைவர் பேகம் காலிதாஷியா தனது கார் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

முன்னதாக அவர் பயணம் செய்த காரை வழிமறித்த ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் அவருக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். அவரது கார் மேற்கொண்டு பயணிக்க முடியாதவாறு அதனைத் தடுத்து நிறுத்தினர். உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்த பொலீஸார் அவரை ஆளும் கட்சிக் கும்பலிடம் இருந்து மீட்டனர். பின்னர் பொலீஸ் பாதுகாப்புடனேயே அவர் தலைநகர் வந்து சேர முடிந்தது.

சனியன்று நடந்த குண்டு வெடிப்புக்கு எதிர்க் கட்சியே காரணம் என்று பிரதமர் ஷேக் கஸீனா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். பாகிஸ்தானிடம் இருந்து நாடு சுதந்திரம் பெறுவதை எதிர்த்து வந்தவர்களும், இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளும் சேர்ந்து நடைபெற உள்ள தேர்தலைக் குழப்பவே இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அதேசமயம் -

தன்னைக் கொலை செய்வதற்கு அரசாங்கம் சதி செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவி காலிதாஸியா குற்றஞ்சாட்டி உள்ளார். சனியன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக தீவிர விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரி உள்ளார்.

இதேவேளை -

மத அடிப்படை வாதிகளும், பயங்கரவாதிகளும் சேர்ந்து விளைவிக்கும் குழப்பங்களிலிருந்து நாட்டைக் காக்க உலக நாடுகள் உதவ வேண்டும் என்று பங்களாதேஷ் அரசு உலக நாடுகளிடம் கேட்டுள்ளது. (ம)

## பிரான்ஸில் விமானக் கண்காட்சி

பாரிஸ்,ஜூன்19

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும் மாபெரும் விமானக் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

பாரிஸின் வடக்கிலுள்ள விமான நிலையம் ஒன்றில் இந்தக் காட்சி நடைபெறுகிறது.

சுமார் 43 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 700 விமானங்கள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கின்றன. இவற்றில் 200க்கும் மேற்பட்ட அதிநவீன விமானங்கள் அறிமுகமாகியுள்ளன.

விமானிகள் இல்லாமல் இயங்கும் விமானம், ரேடர் தொழில் நுட்ப முறைக்கும் அகப்படாத விமானங்கள், சுமார் இரண்டு இலட்சத்து ஐயாயிரம் கிலோ எடையுள்ள உக்ரைன் தயாரிப்பு விமானம் எனப் பல ரக விமானங்கள் கண்காட்சியில் அரங்கேறியுள்ளன.

சுமார் மூன்று லட்சம் பேர் கண்காட்சியைக் கண்டுகளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

1909ஆம் ஆண்டு முதல் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை பிரான்ஸில் இந்த விமானக் கண்காட்சி நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜோர்டான் நாடாளுமன்றம் கலைப்பு

அம்மான்,ஜூன்19

ஜோர்டான் நாடாளுமன்றத்தை, மன்னர் இரண்டாவது அப்துல்லா கலைத்துவிட்டார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்ட 80 உறுப்பினர்கள் கொண்ட கீழ் சபை, மன்னரால் நியமிக்கப்பட்ட 40 உறுப்பினர் கொண்ட செனட் சபை ஆகிய இரண்டும் கலைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வாஜ்பாய் - முஷாரப் சந்திப்பு ஜூலை 14இல் இடம்பெறும்

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயும், பாகிஸ்தான் ராணுவ ஆட்சியாளர் பர்வெஷ் முஷாரப்பும் எதிர்வரும் ஜூலை 14ஆம் திகதி சந்தித்து நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்குப்பின் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

இந்தியாவுக்கு முஷாரப் மேற்கொள்ளவிருக்கும் விஜயம் மற்றும் நிகழ்ச்சிநிரல் ஆகியன குறித்து இருபக்கத்திலும் ஊகங்கள் பல எழுந்துள்ளன. பேச்சுக்களை இந்தியத் தலைநகருக்கு வெளியே வைத்துக் கொள்ளவேண்டும் என யோசனை கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பேச்சு நடைபெறும் இடம் புதுடில்லியாகவே இருக்க வேண்டுமென இந்திய அரசு தீர்மானித்துள்ளதாகவும்-

பேச்சு ஜூலை 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் -

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய இராணுவ ஆட்சியாளர் முஷாரப்பினால் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட நவாஷ் ஷெரீப் ஆட்சியில் இருந்தபோதே இரு நாடுகளுக்கும் இடையில் இறுதியாகப் பேச்சு இடம்பெற்றது. இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்குச் சென்று ஷெரீப்புடன் பேச்சு நடத்தினார். அதன் அடிப்படையில் லாகூர் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

எனினும் கார்கிலில் இடம்பெற்ற இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தை அடுத்து இந்த ஒப்பந்தம் செயலிழந்தது. கார்கில் போர் குறித்து முஷாரப்புக்கும் ஷெரிப்புக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பாகிஸ்தானில் மீண்டும் ஓர் இராணுவ ஆட்சிக்கு வழிவகுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கடும் மழையால் வெள்ள அபாயம்
## 28 பேர் உயிரிழப்பு

புதுடில்லி,ஜூன்19

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தொடர்ந்து பெய்துவரும் பெரும் மழையால் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது.

கடந்த 3 வருடங்களாக நிலவிய கடும் வரட்சியை அடுத்து, கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து கடும்மழை பெய்து வருகிறது.

இப்போது பெய்து வரும் மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவுகள் மற்றும் கட்டட இடிபாடுகளினால் இதுவரை 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ள அபாயம் காரணமாக சுமார் 10ஆயிரம் பேர் வசித்த இடங்களை விட்டு பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் குஜராத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி காரணமாக சுமார் 30 ஆயிரம் பேர் பலியானதுடன் பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து அகதிகளாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## முஷாரப்பை பேச்சுக்கு அழைத்த
# வாஜ்பாயின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது
## லிபிய ஜனாதிபதி தெரிவிப்பு

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப்பை இந்தியப்பிரதமர் வாஜ்பாய் பேச்சு நடத்த அழைத்திருப்பது மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருகிறது. வாஜ்பாயின் இந்தத் துணிச்சலான நடவடிக்கை பாராட்டத்தக்கது என்று லிபிய நாட்டின் ஜனாதிபதி கடாபி கூறியுள்ளார்.

பாகிஸ்தானைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பதன்மூலம் இந்தியப்பிரதமர் வாஜ்பாய் தன்னுடைய கடந்த கால ஆசையான இந்திய - பாக். நட்புறவுக்கு வழி வகுத்துள்ளார்.

இந்த இரு நாடுகளும் தங்கள் நட்புறவை வளர்த்துக்கொள்ள, அனைத்து வழிகளிலும் நிபந்தனையற்ற உதவிகளைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கடாபி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள லிபியாவின் தூதர் அபுசெத் ஓமர் தோர்டா இது பற்றிக் கூறுகையில்:-

முஷாரப்பை பேச்சுக்கு அழைத்த வாஜ்பாயின் துணிச்சலைப் பாராட்டாமல் இருக்கவும் முடியாது. இரு நாடுகளும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசும்போது பல நல்ல முடிவுகளை எடுக்கமுடியும். எனவே இந்திய - பாக். இனி நேச நாடுகளாக இருக்கப் போவதில் ஏந்த மாற்றமும் இல்லை என்றார். (ம)

## ருவாண்டாவில் 9 பேருக்கு மரண தண்டனை

ருவாண்டாவில் 1994ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய மனிதப் படுகொலைகள் பற்றி விசாரணை நடத்திவரும் நீதிமன்றம் விசாரணைகளின் போது குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஹூட்டு இனத்தவர்கள் 9 பேருக்கு மரணதண்டனை விதித்துள்ளது.

ருவாண்டாவில் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் சுமார் 100 நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற இப்படுகொலைச் சம்பவத்தின் போது சுமார் 8 லட்சம் சிறுபான்மை ஹூட்சி இனத்தவர்கள் பெரும்பான்மை ஹூட்சி இனத்தவர்களால் வெட்டியும் இரும்புக் கம்பிகளால் அடித்தும் கொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலைகள் பற்றி விசாரணை செய்துவரும் நீதிமன்றமே கடந்த வெள்ளிக்கிழமை 9 பேருக்கு மரண தண்டனையும், 126 பேருக்கு ஆயுள் சிறைத்தண்டனையும் வழங்கியது. குற்றம் சாட்டப்பட்ட 25 பேரை விடுதலையும் செய்துள்ளது. (ம-9).

## நிவாரணப் பணியாளர்கள் கடத்தப்பட்டனர்

துஷான்பே,ஜூன்19

தஜிகிஸ்தானில் உள்ள இஸ்லாமிய கெரில்லாக்கள் ஜேர்மன் மனிதாபிமான நிவாரண அமைப்பின் 11 ஊழியர்களைக் கடத்தியுள்ளனர். இது குறித்து அந்நாட்டு ஜனாதிபதி எமோமாலி ரஹ்மானொவ் தனது அமைச்சரவையை அவசரமாகக் கூட்டி ஆராய்ந்துள்ளார்.

தாவல்-தாரா பிராந்தியத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 15 வெளிநாட்டவர்கள் இந்தக் கெரில்லாக்களால் கடத்தப்பட்டனர். இவர்களில் நால்வர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். மீதமுற்ற பதினொரு பேரையும் விடுவிப்பது குறித்து ரஹ்மானொவ் அவசரமாகத் தனது அமைச்சர்களுடனும் இராணுவத் தலைவர்களுடனும் ஆராய்ந்துள்ளார். (ம-9)

# மின்சாரம் தாக்கி பீஹாரில் 13 பேர் கருகி மாண்டனர்!

புதுடில்லி,ஜூன்19

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் மின்சாரம் தாக்கி 13 பேர் கருகி உயிரிழந்துள்ளனர்.

பீஹாரின் பட்டனா மாவட்டத்தில் கால்நடைகளை ஏற்றிக்கொண்டு சென்ற ட்ரக் ஒன்று வீதியோரத்தில் நின்ற உயர் அழுத்த மின் கம்பிகள் செல்லும் 'போஸ்ட்' ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இந்தப் பரிதாபச் சம்பவம் நிகழ்ந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ட்ரக் மோதிய வேகத்தில் 'போஸ்ட்' முறிந்து விழுந்ததால் மின் கம்பிகள் அறுந்து ட்ரக்கில் இருந்தவர்கள் மீது வீழ்ந்தன. இதனால் 5 குழந்தைகள் உட்பட 6 பேர் அந்த இடத்திலேயே கருகி மாண்டனர். ஏனையோர் அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். (ம)

# இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக பெல்ஜியம் நீதிமன்றில் வழக்கு
## லெபனான் பெண் தாக்கல் செய்வார்

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் மீது பெல்ஜியத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்களில் இவர் ஈடுபட்டதாக வழக்கில் குற்றஞ்சாட்டப்படவுள்ளது.

1952ஆம் ஆண்டில் இஸ்ரேல் லெபனான் மீது ஆக்கிரமிப்பு நடத்தியது. அப்பொழுது லெபனானில் உள்ள அகதி முகாம்களில் இருந்த ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அச்சமயம் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சராக ஷரோன் இருந்தார். இப்பொழுது அவர் பிரதமராக உள்ளார்.

லெபனான் ஆக்கிரமிப்பின் போது உயிர் தப்பிய ஒரு பெண்ணே இவ் வழக்கைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். அவரது வழக்கறிஞர் வழக்கைத் தாக்கல் செய்யவிருக்கிறார்.

பெல்ஜியம் நீதிமன்றம் ஒன்றில் வெளிநாட்டவர் மீது விசாரணை நடத்தப்பட அந்நாட்டுச் சட்டம் இடம் அளிக்கின்றது.

சம்பவத்தில் உயிர் தப்பிய வேறு 28 பேரின் சாட்சியங்களையும் அப்பெண் தனது வழக்கறிஞரிடம் கையளித்துள்ளார்.

## தனித்து வாழும் பெண்கள்
# செயற்கை முறை கருத்தரிப்பை நிராகரிக்கும் நோர்வே மக்கள்

ஒஸ்லோ,ஜூன்19

தனித்து வாழும் பெண்கள் செயற்கை மருத்துவ முறையில் கருத்தரிப்பதை அனுமதிக்கும் சட்டச் சீர்திருத்தத்தை நோர்வே மக்கள் நிராகரித்துள்ளனர்.

இந்தச் சட்டச் சீர்திருத்தத்தை அனுமதிப்பது தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் 74 சதவீதமான மக்கள் இத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள்- தமக்குத் தேவைப்படும் போது செயற்கை மருத்துவ முறைகள் மூலம் (பரிசோதனைக் குழாய் குழந்தை) கருத்தரிப்பதற்கு இந்தச் சட்டச் சீர்திருத்தம் அனுமதி வழங்குகின்றது.

நோர்வே நாடாளுமன்றில் நீண்டகாலமாக நடைபெற்ற விவாதத்துக்குப் பின்னரே இந்தச் சட்டச் சீர்திருத்தத்துக்கு நாடாளுமன்றம் அனுமதி அளித்தது. இருப்பினும் மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு அவர்கள் அனுமதி அளித்தாலேயே இதனைச் சட்டமாக்க முடியும் என்றும் நாடாளுமன்றம் தெரிவித்தது.

இதனை அடுத்து நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பெரும்பான்மையான மக்கள் இந்த சட்டச் சீர்திருத்தத்தை எதிர்த்துள்ளனர்.

சமூக ஒழுங்கு குலைவதற்கு இந்தச் சீர்திருத்தம் காரணமாகிவிடும் என்று கருதுவதாலேயே அதனைத் தாம் எதிர்ப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-9)

# ஈ. பி. ஆர். எல். எவ். ஏற்பாட்டில்
# தியாகிகள்தினம் இன்று அனுஷ்டிப்பு;

## யாழ். ஆஸ்பத்திரியில் இரத்ததானம்

யாழ்ப்பாணம் ஜூன் 19

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் உயிர்த்தியாகம் செய்த தியாகிகளையும் பொது மக்களையும் நினைவு கூரும் வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் 11 ஆவது தியாகிகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத் தினத்தினை ஒட்டி இக் கட்சியின் வரதர் அணியினால் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் பல்வேறு சமூகப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று கட்சியின் யாழ். பிராந்திய அமைப்பாளர் த. சுபத்திரன் தெரிவித்தார்.

யாழ். நகரில் இத்தினத்தை ஒட்டி கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் அமரர் க. பத்மநாபாவின் நினைவுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இந்த நினைவு தினத்தை ஒட்டி யாழ். போதனாவைத்தியசாலையில் கட்சியின் 50 உறுப்பினர்களினால் இரத்ததானம் வழங்கப்படவுள்ளதுடன் கட்சியின் யாழ். அலுவலகத்தில் இறந்த தோழர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

நவாலி மகேஸ்வர இல்லம், மூளாயில் இயங்கும் கைதடி வயோதிபர்சாலை, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் சிறுவர் இல்லம், ஏழாலையில் இயங்கும் கைதடி சைவச்சிறுவர் இல்லம், திருநெல்வேலி முத்துத்தம்பி இல்லம், கொக்குவில் தாயகம், நெல்லியடி பரமானந்தா ஆச்சிரமம், கோப்பாய் சாயி இல்லம், இருபாலை அன்னை திரேசா இல்லம், யாழ். திருமறை மன்றம் போன்றவற்றுக்கு இன்று ஈ. பி. ஆர். எல். எவ்வினால் மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றில் சிலவற்றுக்கு தளபாடங்கள் மற்றும் கல்வி உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலைக்கு 'கரம்போர்ட்' உட்பட விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இத்தினத்தை ஒட்டி வவுனியாவிலும் இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளதுடன் வைத்தியசாலையில் இருக்கும் நோயாளர்களுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா, பிஸ்கெட், குளுக்கோஸ், சவர்க்கார வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும் என்று கட்சியின் வவுனியா மாவட்டச் செயலாளர் க. ஞானதாஸ் தெரிவித்துள்ளார்.

### சுரேஷ் அணி ஏற்பாடு

தியாகிகள் தினத்தை ஒட்டி இன்று ஈ. பி. ஆர். எல். எவ். இன் சுரேஷ் அணியினால் மன்னாரில் விளையாட்டு விழாவும் பொதுக் கூட்டமும் நடத்தப்படவுள்ளன.

ஈ. பி. ஆர். எல். எவ். இன் மன்னார் மாவட்டச் செயலாளர் ச. ரெட்ணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனும் சிறப்பு அதிதியாக அருட்தந்தை ந. பிரான்சிஸ் கெனடியும் கலந்து கொள்வர்

(க-5)


## உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான அவசர பொதுக்கூட்டம்

உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் நாளை மறுதினம் (21-06-2001) வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு புலோலி பிரதேச சபை பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் சகல உழவு இயந்திர உரிமையாளர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

தலைவர்:
உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்.
வல்லிபுரம். (சி/17142)



அதிர்ஷ்டம் அழைக்கின்றது
## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகம், கல்வி, உயர் கல்வி, பிரயாணம் ஆகிய தடைகள் நீங்க ஆலோசனை வழங்கப்படும்.

கண்ணூறு, நாவூறு தீர வியாபார வசியத்துக்கு யந்திரம் செய்து கொடுக்கப்படும்.

பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

செவ்வாய், சனி நாள்களில் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் ஞாயிறு முழுநாளும் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம்.

சு. சிவஷண்முகானந்தக்குருக்கள்
(89194)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர்
செல்வி குமுதினி வைத்திலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தையார்
**கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம்**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட செயலக அலுவலர்களும்,
நலன்புரிக் கழக உறுப்பினர்களும்.

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம். (சி/17146)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
சி. நேசலிங்கம் (பொருளியல் சிறப்புக் கலை)
அவர்களின் அன்புத் தந்தையார்
**மாணிக்கம் சிங்கன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இறுதி வருடம், கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்-

(89187)

## பொன்விழாக் குழு

யாழ். வைத்திஸ்வரக் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கத்தின் 50 ஆவது அகவை நிறைவை ஒட்டிப் பொன் விழா நடத்தி அவரைக் கௌரவிக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் அமைப்பாளராகச் 'சுடர்' இ. மகேந்திரனும் தலைவராக எஸ்.கே. சண்முகலிங்கமும் செயலாளராக கி, கிருபானந்தாவும் பொருளாளராக சு. பரமேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ-3)

## கண்காட்சி

சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையின் புத்தகக் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை 9.30 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கண்காட்சி நிகழ்வை, ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வீ. இராமச்சந்திரன் ஆரம்பித்து வைப்பார். (ம-27)

## காங்கேசன் முகாம் கைதிகளுக்குக் கடிதங்கள்

காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமில் உள்ள கைதிகளுக்கு வழங்குவதற்கான உணவு மற்றும் கடிதங்களை அவர்களின் உறவினர்கள் நாளை புதன்கிழமை காலை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அதன் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அன்று கைதிகளைப் பார்வையிடவுள்ள அதிகாரி அவற்றை அவர்களிடம் வழங்குவார். (க - 10)

# கொழும்பில் 17 தமிழர் கைது

கொழும்பு, ஜூன் 19

புறக்கோட்டை மற்றும் கோட்டைப் பொலீஸார் கடந்த சனியன்று இரவு அந்தப் பிரதேசத்தில் உள்ள விடுதிசளைச் சுற்றிவளைத்து மேற்கொண்ட தேடுதல்களில் 17 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகக் கொழும்பு மத்தி சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஏ. டி. எஸ். பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இருபத்தைந்து பொலீஸார் கொண்ட குழு, வாழைத்தோட்டத்தில் உள்ள விடுதிகளில் தேடுதலில் ஈடுபட்டது என்றும் —

வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர்களில் தங்குமிட அனுமதியைப் பெறாதவர்களே கைதுசெய்யப்பட்டனர் என்றும்— அவர் மேலும் சொன்னார். (க-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூன் 19

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சன சமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 7 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ கோண்டாவில் மக்கள் முன்னேற்றக்கழக 'பி' அணி எதிர் கொக்குவில் கலைமகள் சனசமூக நிலையம்.

★ அரியாலை ஜெயபாரதி சன சமூக நிலையம் எதிர் திருநெல்வேலி முடமாவடி ஞான வைரவர் சன சமூக நிலைய 'பி' அணி. (ஐ-86)

★ ★ ★

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு அவை யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழக தாச்சி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பெண்கள் அணி**

★ யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் எதிர் சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழகம்.

**ஆண்கள் பிரிவு**

★ உடுவில் சிந்து விளையாட்டுக் கழகம் எதிர் இணுவில் அறிஞர் விளையாட்டுக் கழகம்.

(ஐ-86)

## தமிழ் விழா

யாழ்ப்பாணம் ஜூன் 19

யாழ். மத்திய கல்லூரியின் தமிழ்விழா இன்று காலை 9-30 மணிக்கு செல்வன் இ. வினோதராஜ் தலைமையில் கல்லூரயின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஐ-10)

## உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 19

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் சுகாதார வாரமும், கண்காட்சியும் இன்றும், நாளையும் கல்லூரி முதல்வர் அ ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமாசிவபாதசுந்தரம் கலந்துகொள்வார்.

கண்காட்சியை தினமும் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## சமூகக்கல்வி தின போட்டிகள்

காரைநகர், ஜூன் 19

தீவக வலய சமூகக்கல்வி தின கோட்ட மட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் நடைபெற உள்ளன.

நெடுந்தீவு கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும், வேலணைக் கோட்ட மட்டப் போட்டிகள் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், ஊர்காவற்றுறை கோட்ட மட்டப் போட்டிகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடம்பெறும்.

(ஐ-73)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

தரம் 6—11 சித்திரப்பாட ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. தகுதியுடைபோர் எதிர் வரும் 22 - 06 - 2001இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

-- அதிபர்.

(சி/17144)

## இன்று 19--06-2001
(செவ்வாய்க்கிழமை)
## சமாதான அரணைப் பார்வையிடல்

அன்புடையீர்!

ஈசுரவிநாயகரின் தேவஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ள சமாதான அரணைப் பார்வையிட தென்னிலங்கையிலிருந்து வருகைதந்துள்ள சர்வமத சமாதானக் குழுவினர் இன்று செவவாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் ஆலயத்துக்கு வருகைதரவுள்ளனர் என்பதை அறியத்தருகின்றேன்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

—சோழியூரான்—

ஈசுர விநாயகர் ஆலயம்
சுழிபுரம் — பறாளாய், (89193)

உதயன்

## தடை முடிச்சை தாமதியாது அவிழுங்கள்

சமாதான முயற்சி தடங்கலுற்று நிற்கிறது. அரச படைகளும் விடுதலைப் புலிகளும் போர் நடவடிக்கையில் மீண்டும் ஈடுபடுவதற்குத் தயாராகி வருவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

இரண்டு தரப்பார்களிடமும் நவீன ஆயுதங்கள் இருப்பதால், போர் ஒன்று மீண்டும் வெடிக்குமாயின் வடக்கு-கிழக்கில் இதுவரை இல்லாத அளவுக்குப் பேரழிவுகள் ஏற்படும்; மீண்டும் இடப்பெயர்வு, அகதி வாழ்க்கை என்று அவலப்பட நேரிடும்; போரின் விளைவுகளும் மிகப் பயங்கரமானதாக இருக்கும்; என்று மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர். தமிழ் மக்கள் மத்தியில் வெளித் தெரியாத பதற்றநிலை ஒன்று தோன்றியுள்ளது.

இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காண இரு தரப்புகளும் முன்வந்தபோது, மக்கள் பெரும் மகிழ்ச்சியுற்றார்கள். நீண்ட கால விவகாரத்துக்கு - பிணக்குக்கு - தீர்வு காண்பதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாக அமையும் என்றும் கருதினார்கள்.

சமாதான முயற்சி தடங்கல் இன்றி முன்னேற வேண்டும் என்பதே அவர்களின் பெரு விருப்பமாக இருந்தது. மேற்படி முயற்சி இப்போது நகர்வின்றி அசையாதிருப்பதற்கு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசாங்கம் பின்னடிப்பதே காரணம்.

இது விடயத்தில் ஆளுங்கூட்டணிக்குள்ளேயே கருத்து முரண்பாடு நிலவுகிறது. தீவிரவாதப் போக்குடையவர்களின் செல்வாக்கும் ஆளுந தரப்புக்குள் சென்றடைந்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை வரவேற்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்தில் தெரிவித்தது. ஆனால் அந்த அமைப்பின் மீதான தடையை நீக்குவது குறித்துத் திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்காமல் இதுவரை "வழுவாடி" வந்தது.

அத்தகைய பின்னணியில், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ வெளியிட்டிருக்கும் கருத்து கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதன் மூலம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி தீர்வு ஒன்று எட்டப்படலாம் என்றால், உடனடியாகப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் - என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

டிரோனின் கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோக பூர்வமான நிலைப்பாடல்ல. ஆயினும் இதுவரை இவ்விடயத்தில் ஒருவகை "மௌனம்" சாதித்த பக்கத்தில் இருந்து புதிய கருத்தாக அது வெளிவந்துள்ளது. அனேகமாக கட்சியின் அபிப்பிராயத்தை மறைமுகமாகத் தெரிவித்து, அரசாங்கத்தின் நாடியைப் பிடித்துப் பார்க்கும் அரசியல் தந்திரமாக இருக்கும் என்று ஊகிக்க இடமுண்டு.

எந்த முயற்சியும், அது வெல்லும் என்ற நம்பிக்கையுடனேயே ஆரம்பிக்கப்படுவது உண்டு. அரசு-விடுதலைப் புலிகள் பேச்சும் அத்தகைய நம்பிக்கையுடனேயே ஆரம்பிக்கப்பட்டது. தீர்வு ஒன்று எட்டப்படும் என்ற நம்பிக்கையுடனேயே அது முன்னெடுக்கப்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்காது என்பது டிரோன் பெர்னாண்டோவின் கூற்றில் தொனிக்கிறது.

இதனைக் கவனத்தில் எடுத்து, டிரோன் மூலமே ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்பு கொண்டு அதனை கட்சியின் நிலைப்பாடாக ஊர்ஜிதம் செய்ய அரசு செயலில் இறங்குவதே அரசியல் தந்திரம்.

அரசாங்கத் தரப்பினர் இதனைத் தக்கவாறு பயன்படுத்தி ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவையும் பெற்று, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க ஏற்பாடு செய்ய வேண்டும். டிரோனின் கூற்று காதில் விழாதது போல நடித்துச் சமாதான முயற்சிக்குப் போடப்பட்டிருக்கும் தடை முடிச்சை மேலும் இறுக்கலாகாது. தாமதிக்காது அவிழுங்கள்.

## இந்து மத குருமார் ஒன்றியத்தை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் செயற்பாடுகளை தேசிய ரீதியில் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல பாகங்களிலும் அதன் கிளைகளும், அமைக்கப்பட்டுவருகின்றன. பிரதிநிதிகளும் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர்.

கொழும்பு மாநகரில் சர்வதேச இந்து குருமார்களின் செயற்பாடுகளை கொழும்பு ஸ்ரீ வித்தியா பீடம் நிறைவேற்ற உள்ளது. கண்டி மாவட்டத்தில் பிரம்மஸ்ரீ யோ.பத்மநாதசர்மா, வவுனியா மாவட்டத்தில் சிவஸ்ரீ மு.ஜெயந்திநாதக் குருக்கள், திருமலை மாவட்டத்தில் சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள், மட்டக்களபபு மாவட்டத்தில் பிரம்மஸ்ரீ ஸ்கந்தராசசர்மா ஆகியோர் ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒன்றியத்தின் அமைப்பு விதிகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு ஒன்றியத்தின் சட்டரீதியான பிரதிநிதிகளாக இவர்கள் ஒன்றியச் செயற்பாடுகளை முன்னெடுப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலும் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் பிரதிநிதிகளை நியமனம் செய்ய ஒன்றியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. (ம-152)

## நாட்டு நடப்பு

சயிக்கிளில் ஓடிய சரசக்கா
சடுதியாய் விழுந்தா நடுத்தெருவில்
பையவே கிட்டப் போய்ப் பார்த்தால்
பக்கத்தில் கிடக்குது பல்செற்று
கழண்டு விழுந்த தலை டோப்பை
கவ்விக் கொண்டோடுது நாய்க்குட்டி
சுழண்டு சுழண்டு பின் திரிந்த
சுந்தரன் விட்டான் 'லவ்' அன்றே!

*- விகடகவி -*

# முன்னாள் துணைவேந்தர் துரைராஜா பெயரில் தகவல் தொடர்பு மையம் ஆரம்பிக்க வேண்டும்

## நினைவுக் கூட்டத்தில் விவசாய உயிரியல் துறைத் தலைவர்

யாழ்ப்பாணம்,ஜூன்19

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜாவின் பெயரில் தகவல் தொடர்பு மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் நடத்தப்பட்ட பேராசிரியர் அ.துரைராஜாவின் ஏழாவது நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத்தலைவர் கு.மிகுந்தன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

பேராசிரியர் துரைராஜாவின் நடவடிக்கைகள் எப்பொழுதும் தனித்துவம் மிக்கதாக இருக்கும். கடும் சொல் பிரயோகிக்காத கண்டிப்பானவர் அவர். என்னைப் போன்றவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசிப்பதற்கு காரணமாக இருந்தவர் அவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றும் போது கூறியதாவது:-

உலகப் புகழ்பெற்ற அறிஞன் பேராசிரியர் அ.துரைராஜா என்று சொன்னால் அது மிகையல்ல. நிர்வாகத்தின் வழிகாட்டியாக இருப்பதற்கு அவர் ஓர் உதாரணபுருஷர் எல்லோராலும் மதிக்கப்பட்ட மாமனிதர் அவர்.

பேராசிரியரைப் பற்றி இன்றைய மாணவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். பொறுமை, அர்ப்பணிப்பு, நேரத்தை மதிக்கின்ற தன்மை இவை யாவும் அவரிடத்தில் மேலோங்கிக் காணப்பட்டன. வசதி, வாய்ப்பற்ற காலத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியவர் பேராசிரியர் துரைராஜா.

### சைக்கிளில் வருவார்

உடுப்பிட்டியில் இருந்து சைக்கிளிலேயே பல்கலைக்கழகத்துக்கு வருவார். காலை 7.30 மணிக்குத் தனது துணைவேந்தர் அலுவலகத்தில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

பேராசிரியரின் ஆழமான கல்விப்புலமை எல்லோராலும் மதிக்கப்பட்டது. ஆசிரியர்கள் தொடக்கம் மாணவர்கள் வரை அவரை மனதில் இருத்தி மதிப்பளித்தனர். கல்வி அவருக்கு நல்ல துணிவைக்கொடுத்தது. இதனால் எந்த விடயத்திலும் துணிசலான முடிவுகளை எடுத்தார். பல்கலைக்கழக சமூகத்துக்கு மட்டுமல்ல ஊருக்கும், சமுதாயத்துக்கும் ஏன் தமிழ் இனத்துக்கும் கூட சிறந்த மனிதராக விளங்கினார் என்று குறிப்பிட்டார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த விவசாயபீட மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதி எஸ்.ஸ்ரீகரன் உரையாற்றும்போது கூறியதாவது:-

நான் பாடசாலைக் கல்வியைக் கற்று வந்த காலத்தில் பேராசிரியரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக எனது பாடசாலையின் சார்பாகச் சென்றிருந்தேன். அன்று அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கையும் அவர்களின் சோகங்களும் பேராசிரியரைப் பற்றி என்மனதில் எண்ண வைத்துவிட்டது.

இன்று நாங்கள் இந்த நிகழ்வை நடத்துவதற்கு அதுவும் ஓர் காரணம். இனிவரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவித்தார்.

கலைப்பீடாதிபதி செ.பாலச்சந்திரன், விவசாய பீட பழைய மாணவர் அ.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(க-10-5)

## அஸ்கிரிய பீடாதிபதியுடன் சென்று பிரபாவுடன் பேச முயற்சிக்கிறேன்

### 'பாரதிநேசன்' நினைவுக் கூட்டத்தில் எஸ்.டி.

அஸ்கிரிய பீடாதிபதியையும் அழைத்துக் கொண்டு வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக முன்னாள் சுதந்திரக் கட்சி எம்.பி. எஸ்.டி.பண்டாரநாயக்க தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட பத்திரிகையாளரும், சமதர்மவாதியுமான பாரதிநேசன் வீ.சின்னத்தம்பியின் நினைவஞ்சலிக் கூட்டம் கொழும்பு வெள்ளவத்தை இராம கிருஷ்ணன் மிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எஸ்.டி.பண்டாரநாயக்க மேற்கண்டவாறு சொன்னார்.

இலங்கையின் இன நெருக்கடிக்கு எவ்விதத்திலேனும் தீர்வு காணப்பட வேண்டும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தேசிய பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும்.

சிங்களவர்களும் தமிழர்களும் மோதிக் கொள்வதால் சனத்தொகையில் 7 சதவீதமாக உள்ள மக்கள் மட்டுமே 75 சதவீத நன்மைகளைப் பெறுகிறார்கள். அதனை நிறுத்தவேண்டும் - என்றும் அவர் சொன்னார்.(க-7)

## சத்திரசிகிச்சை சேவை வழமைபோல்

வடமராட்சி,ஜூன்19

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பிரிவு வழமைபோல் இயங்கி வருகிறது.

இந்தப் பிரிவில் கடமையாற்றுவதற்கென எல்லை கடந்த நாடுகளின் மருத்துவக் குழுவை (எம்.எஸ்.எவ்.) சேர்ந்த வைத்திய அதிகாரி ஒருவர் கடந்த வியாழக்கிழமை வந்துசேர்ந்துள்ளார்.

இப்பிரிவில் பணியாற்றிய வைத்திய அதிகாரி லீவில் சென்றதால் ஒருசில தினங்கள் சத்திரசிகிச்சை சேவை நடைபெறவில்லை. (அ-173)

### நாளை

ஆனி 6
புதன்கிழமை
திதி: சதுர்த்தசி
முன் இரவு 7.49 வரை.
நட்சத்திரம் : ரோகிணி
முன் இரவு 7.50 வரை.
கரிநாள்
சுபநேரம் : 4.24 - 5.54
ராகுகாலம் : 11.54 - 1.24
(பழைய நேரப்படி)

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 10 கிராம அலுவலர் பதவிகள் காலி!

### வெற்றிடங்களை நிரப்புமாறு தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் வெற்றிடமாகவுள்ள 10 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் கிராம அலுவலர்களை நியமிக்க சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் வே. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் 18 கிராம அலுவலர்களுக்குரிய ஆளணி இருந்தும் தற்பொழுது 8 கிராம அலுவலர்களே கடமையாற்றி வருவதாகப் பலராலும் எடுத்துக் கூறப்பட்டது.

இதனை அடுத்து இந்த விடயத்தை கிளிநொச்சி அரச அதிபர், யாழ்.அரச அதிபர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவருவதெனவும்-

அதன்மூலம் கிராம அலுவலர்களை நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும்-

தீர்மானிக்கப்பட்டது.

(க-7)

## செயற்கை முறை சினைப்படுத்தும் சேவை

யாழ்ப்பாணம்,ஜூன்19

வேலணையில் உள்ள கால்நடை வைத்தியசாலையில் விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்களில் கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை நடத்தப்படுவதாக கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.(க-7)

### உதயவாக்கு

உண்மை கனமானது. எனவே தான் அதைச் சுமப்பவர்கள் குறைவாக இருக்கின்றனர்.

### கண்ணிகள் காத்திருக்கின்றன கவனம்!

இடப்பெயர்வால் பலநாள் பிரிந்திருந்த சொந்த வீடு வாசலைப் பார்ப்பதற்கு மனந்துடிப்பது இயல்பே. எனினும் மனதை அடக்கி, பாதுகாப்பை உறுதிப்படுத்துமுன்னர் உள்ளே போகாதீர்கள்!



# தவறுதலாக மண்ணெண்ணெய் அருந்தும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது

நாம் எதிர்நோக்கும் புதிய புதிய பிரச்சினைகளில் தவறுத்லாக மண்ணெண்ணெய் குடித்து அனுமதிக்கப்படும் சிறார்களின் எண்ணிக்கை மிக மோசமாக அதிகரித்து வருவது கண் கூடு. ஏனென்றால், 85, 90களில் இது ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. 90களில் தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்து அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை

## சுகநலம்

மாதமொன்றிற்கு ஒன்று என்பது கூட அரிதாகவே இருந்திருக்கிறது. ஆனால், இப்போது நாளொன்றிற்கு (மாதமொன்றிற்கு 25-35 சிறார்கள் வரை) சுமார் ஒருவர் வீதம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதை வைத்தியசாலைப் பதிவேடுகள் கூறுகின்றன.

இதற்குக் காரணங்களாக தற்போது மண்ணெண்ணெய் தாராளமாகக் கிடைப்பதும், இடம் பெயர்ந்த நிலையில் மக்கள் சிதறுண்டு வாழுகின்ற சூழலில் ஆங்காங்கே 'சோடா' போத்தல்களிலும் பேணிகளிலும் வைக்கிறார்கள். இதனால் சிறார்கள் மிக இலகுவாக "சோடா" அல்லது தண்ணீர் என்று தவறுதலாகக் குடித்துவிடுகின்றனர். அப்படி வாய்க்குள்ளே ஊற்றிய பின்னர் தாங்கள் எதிர்பார்த்த பொருள் இல்லையென்று உணர்ந்தாலும் அதனை வெளியே துப்புவதற்குத் தெரியாத நிலையில் விழுங்கிவிடுகின்றனர்.

இது பற்றி யாழ்-போதனா வைத்தியசாலை குழந்தை வைத்திய விடுதியினர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விளக்கக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதல் மண்ணெண்ணெய் சோடா போத்தல்களில் வைக்கும்போது குழந்தைகள் அவற்றைச் 'சோடா' என நினைத்துப் பருகிவிடலாம். எனவே மண்ணெண்ணெய்யை வேறு கொள்கலன்களில் இட்டு முடியுமானவரை குழந்தைகளுக்கு எட்டாத இடங்களில் பாதுகாப்பாக வைப்பது இப்பிரச்சினையைத் தடுப்பதற்கு சிறந்த வழியாகும் என்றும்'; அப்படித் தவறுதலாகக் குழந்தை குடித்துவிட்டால் வாந்தி எடுக்கச் செய்யக்கூடாது. ஏனெனில் அது குழந்தையின் நுரையீரலைச் சேதப்படுத்திவிடும். அதேபோல் தேங்காய்ப்பாலும் பருக்கக்கூடாது. காரணம், அது மண்ணெண்ணெயின் அகத்து றிஞ்சலைக் கூட்டி, உடன் செயலிழக்கச் செய்துவிடும். இவ்விரு செயல்களுமே குழந்தைகளின் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியவையாகலாம். மண்ணெண்ணெய் குடித்த குழந்தையை அருகிலுள்ள அரசினர் 'வைத்தியசாலைக்கு உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று மேலும் அக்குறிப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் இத்தகைய சிறார்களின் வகையைப் பார்த்தால், வயது வேறுபாடு இன்றி தவழும் பத்து மாதக் குழந்தை தொடக்கம் பன்னிரண்டு, பதினான்கு வயது வரை அனுமதிக்கப்படுகிறார்கள். இது ஒன்றைத் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது வீட்டில் பெற்றோரின், வளர்த்தோரின் அக்கறையின்மையையே காட்டுகிறது. அது மட்டுமல்லாது ஒரே தாய் மூன்று தடவைகள் வெவ்வேறு நாள்களில் தனது குழந்தைகளை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்திருக்கிறார். இதிலும், ஒரே குழந்தை இரண்டு தடவைகள் இதனைச் செய்திருக்கிறது என்றால் அவ்வீட்டிலுள்ள பெற்றோர் குழந்தைகள் மீது கொண்டுள்ள அக்கறையும், பொறுப்புணர்வும் எப்படிப்பட்டது என்று எண்ணத் தோன்றுகிறது.

## பெற்றோரின் பொறுப்பின்மையே இந்த நிலைமைக்குக் காரணம்

அடுத்து, எப்படியாகச் சிறார்கள் மண்ணெண்ணெயைக் குடிக்கிறார்கள எனப் பார்ப்போம். முதலில் சோடாப் போத்தல்களில் இருந்து குடிப்பது தான் அதிகம். இருப்பினும் வீட்டில் 'கலன்'களிலிருந்தும், கடைகளில் 'பரல்'களிலிருந்தும் குழாய்கள் மூலம் உறிஞ்சி எடுக்கப்படும் சந்தர்பங்களைப் பார்த்துவிட்டு,இவ்வாறான முயற்சியிலேயே ஈடுபடும் சிறார்களும் உண்டு. இப்படியாகக் கடையொன்றில் மண்ணெண்ணெய்யை உறிஞ்சியெடுப்பதைப் பார்த்த குழந்தை இம்மாதிரியான முற்சியில் ஈடுபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இதனை தாயானவள் கடைக்காரனுக்கு எடுத்துச்சொன்னபோது "ஐயோ, அது மண்ணெண்ணெய் தானே. ஒன்றும் செய்யாது" என்று கூறியிருக்கிறார். இத்தனைக்கும், தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்த குழந்தை ஒன்று ஒரு சில வாரங்களுக்கு முன்னர் பரிதாபகரமாக இறந்ததும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

மண்ணெண்ணெய் குடித்த குழந்தைக்கு தேங்காய்ப்பால் எக்காரணம் கொண்டும் கொடுக்கக் கூடாது என நன்கு அறிந்த ஒரு தாய், தனது குழந்தை மண்ணெண்ணெய்யைக் குடித்த போது தேங்காய்ப்பால் கொடுத்திருக்கிறார். இவ்வறிவுறுத்தல் நன்கு தெரிந்திருந்தும் ஏன் அப்படியாகச் செயற்பட்டார் என்று மருத்துவர் கேட்டபோது "அந்த நேரத்தில் அயல் வீட்டுக்காரர் சொல்லிறதத்தானே செய்ய வேண்டும்" என்று விடையளித்தாராம். இதனைப் பற்றி நன்கு விளக்கமறிந்த அந்தத் தாய்.

இன்னொரு சிறுவன் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது விக்கல் ஏற்பட குசினிக்குள் சென்று பேணியில் இருந்த மண்ணெண்ணெய்யை தண்ணீர் என்று பருகியிருக்கிறார். மற்றொரு பன்னிரண்டு வயது நிரம்பிய சிறுவன், தனது நண்பன் "எதையும் உன்னால் செய்யமுடியும்தானே ஏலுமானால் மண்ணெண்ணெய் குடித்துக் காட்டு பார்ப்போம்" என்று சவால் விட்ட போது குடித்திருக்கிறார்.

இவையெல்லாம், தவறுதலாக மண்ணெண்ணெய் குடித்து அனுமதிக்கப்படும் சிறார்களின் பலதரப்பட்ட, பலவகைப்பட்ட சிக்கல்களைக் காட்டுகின்றன.

**செ.அன்புராசா**

எனவேதான், இவ்விடயத்தில் வீட்டில் உள்ள பெற்றோர், வளர்ந்தோர் அதிக அக்கறையோடும், கவனத்தோடும் செயற்படின் பல குழுந்தைகளின், சிறார்களின் உயிராபத்துக்களையும் வீணான வேதனைகளையும் தவிர்த்துக் கொள்ளலாம். ☆

# இந்துக் குருமார்களுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோள்!

அண்மைக்காலங்களில் இந்துக் குருமாருக்கும் இந்து கலாசார அமைச்சருக்குமிடையே நெருக்கமான உறவு வளர்ந்து வருவதைப் பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இந்து கலாசார அமைச்சருக்கும் இந்து குருமாருக்குமிடையே நெருக்கமான உறவு பேணப்பட வேண்டியது அவசியம், அதில் தப்பேதுமில்லை. ஆனால் இந்துக் குருமார் அரசியல்வாதிகளுக்கு ஆசி வேண்டி பிரார்த்தனைகளில் ஈடுபடுவதைத் தான் ஜீரணிக்க முடியாமல் உள்ளது.

இப்போது எமது நாட்டில் ஓர் இனச் சுத்திகரிப்பு யுத்தம் நடைபெற்று




வருகிறது. இந்த யுத்தம் காரணமாக எத்தனையோ ஆலயங்கள் இடிக்கப்பட்டுள்ளன. இன்றும் பல ஆலயங்கள் மூடப்பட்டுள்ளன. திருக்கேதீச்சரம் ஆலயத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் இந்த யுத்தம்தான். யுத்தம் ஒழுங்காக நடைபெற வேண்டுமென ஆசி வழங்குவதில் இந்து கலாசார அமைச்சரும் ஒருவர். யுத்தம் நீடிப்பதற்குக் காரணம் அவசர காலச்சட்டம். இந்துக் கலாசார அமைச்சரும் அவரது சகபாடிகளும் நாடாளுமன்றத்திற்குச் சென்ற நாள் முதல் அவசரகாலச்சட்டத்தை ஆதரித்து வருகிறார்கள்.

தமிழ்மொழி அமுலாக்கல் இந்து கலாசார அமைச்சர் அவசரகாலச் சட்டத்தை ஆதரிப்பதற்கு அவரை நாங்கள் குற்றஞ்சொல்ல முடியாது. ஏனெனில் அவருக்கு வாக்களித்து அவரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்து நாடாளுமன்றம் அனுப்பிய பெருமை யாழ்ப்பாணத்து மறத்தமிழர்களையே சாரும்!

மாண்புமிகு ஜனாதிபதி 'யுத்தம் சரணம் கச்சாமி' என்பதையே இருபத்தி நான்கு மணித்தியாலங்களும் உச்சரித்து வருகிறார். இதற்கு ததாஸ்து சொல்பவர் இந்து கலாசார அமைச்சர். இந்து கலாசார அமைச்சருக்கு ஆசி வேண்டி பிரார்த்தனையிலீடுபடுகின்றனர் இந்துக் குருமார். அப்படியானால் இலங்கையில் உள்ள இந்துக் குருமாரும் திருக்கேதீச்சரம், மாவிட்டபுரம், நகுலேஸ்வரம் போன்ற சரித்திரப் பிரசித்திபெற்ற வழிபாட்டுத் தலங்கள் பூட்டப்பட்டிருப்பதையே விரும்புகிறார்களா?

சிவாச்சாரியர்களுக்கு கனடா விசா பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் இந்து கலாசார அமைச்சர் ஈடுபட்டுள்ளதாக பத்திரிகை வாயிலாக அறியமுடிந்தது. சிவாச்சாரியர்களை கனடாவுக்கு அனுப்பிவிட்டு பூட்டப்பட்டுள்ள இந்துக் கோயில்களையும் பெயர்த்து கனடாவுக்கு அனுப்பும் திட்டம் உள்ளதோ?!

அண்மையில் யாழ்.சேவை ஒரு செய்தியை ஒலிபரப்பியது. அதில் இந்து கலாசார அமைச்சருக்கு ஆசி வேண்டி இந்துக் குருமார் பிரார்த்தனையில் ஈடுபட்டதாகவும் அங்கு உரையாற்றிய மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் 'இன்று இந்துக் குருமார்களின் வாழ்வில் ஒரு பொன்னாள்' எனக் கூறியதாகவும் அந்தச் செய்தி கூறியது. மாவை ஆதீன கர்த்தா இந்து சமயம் பற்றிய நிறைந்த அறிவுள்ளவர். அதனால் இந்துக் குருமார்களால் மட்டுமன்றி பொதுமக்களாலும் அடியார்களாலும் நன்கு மதிக்கப்படுவர். அவர் மேற்கண்டவாறு கூறியிருப்பின் அவரது புலமையும் மக்கள் கொண்டுள்ள மதிப்பும் அற்றுப்போயின என்பதே அர்த்தமாகிவிடும்.

'தென்னிந்திய திருத்தல யாத்திரைக்கு வசதி செய்து தருமாறு கோரிக்கை', 'இந்துக் குருமார் அரசியலில் ஈடுபடுவதில்லை என்ற குறை இனிமேல் நீங்கிவிடும்' இவை எல்லாம் பத்திரிகைச் செய்திகள்.

ஐயா அந்தணப் பெருந்தகைகளே! உங்களிடம் அட்டாங்க நமஸ்காரமாக கேட்டுக்கொள்வது என்னவென்றால், எம்மிடம் தென்னிந்திய திருத்தல யாத்திரை செய்வதற்குப் பணமில்லை. நாங்கள் எமது குல தெய்வங்களை வழிபட்டாலே போதும்.

**சிவப்பிரான்**
**நல்லூர்.**

உங்களால் முடிந்தால் பாலாவியில் நீராடி திருக்கேதீச்சரப் பெருமானை வழிபடுவதற்கும், கீரிமலையில் நீராடி நகுலேஸ்வரப் பெருமானையும் மாவைக் கந்தனையும் வழிபடுவதற்கும் அமைச்சர் மூலம் வழிகோலுங்கள். இல்லாவிட்டால் உங்களது அந்தணத் தொழிலுடன் நில்லுங்கள். உங்களது மூதாதையரான பீஷ்மர் அதர்மயுத்தம் புரிந்தது போன்று நீங்களும் அதர்மத்திற்கு ஒத்துழைக்காதீர்கள்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, மதப்பற்று உள்ள அந்தணப் பெருந்தகைகள் மன்னித்துக் கொள்வார்களாக. ☆

# புலிகள் மீதான தடையை நீக்குவதற்குச் சட்டத் திருத்தம்?

## அரசு ஆராய்ந்து வருகிறதாம்

லண்டன்,ஜுன்19

தடைசெய்யப்பட்ட அமைப்பு ஒன்றை சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ள இடமளிக்கும் வகையில் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வருவது குறித்து இலங்கை அரசு ஆராய்ந்து வருகிறதாம்.

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இந்தத் தகவலை வெளியிட்டது.

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருமாறு வெளிநாடுகள் பலவும் கொடுத்துவரும் அழுத்தத்தைத் தொடர்ந்து இலங்கை அரசு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்றும் -

விடுதலைப்புலிகள் மீதான தடையை தற்காலிகமாகவேனும் நீக்குவதற்குரிய நடவடிக்கைகளில் அது ஈடுபட்டுள்ளது என்றும் - அந்த வானொலி மேலும் தகவல் வெளியிட்டது. (அ-7)

# வவுனியா மாவட்டத்தில் பணிபுரியும் கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்க உதவுங்கள்!

## அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்19

வவுனியா மாவட்டத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களாகப் பணிபுரிபவர்கள் அதிபர்களாக நிரந்தரமாக்கப்படுவதற்குப் புதிதாக விதிக்கப்பட்ட நிபந்தனைகள் தமக்குப் பாதகமாக அமைந்துள்ளதால் இந்நியமனங்கள் தொடர்பாக இதுவரை காலமும் பின்பற்றிவந்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அதிபர்களை நிரந்தரமாக்கக்கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வவுனியா மாவட்ட கடமை நிறைவேற்று அதிபர்கள் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர் என்று ஈ.பி.டி.பி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரகு ஊடாக வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை வவுனியா மாவட்ட கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் கடந்த வியாழக் கிழமை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்தினர் அமைச்சரிடம் அளித்துள்ள மகஜரில்; தற்போது கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றும் அதிபர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிரந்தர நியமனத்திற்கு கடமை நிறைவேற்று அதிபராக 5 வருடமும் ஆசிரிய சேவையின் பயிற்சியின் பின்னர் 7 வருடமும் சேவையாற்றி இருக்க வேண்டுமென கோரப்படுவதாக அறியப்படுகின்றது. இவ்விரு நிபந்தனைகளும் எம்மில் அனேகமானவருக்குப் பாதகமாகவே அமைகின்றன.

வவுனியா மாவட்டத்தைப் பொறுதத மட்டில் போக்குவரத்து வசதியற்ற, அடிப்படைவசதிகள் எதுவும் இல்லாத பாடசாலைகளில் பல்வேறு இன்னல்களின் மத்தியில் எமது சேவையை நிறைவேற்றி வருகின்றோம். இப்பாடசாலைகளில் வேறு எவரும் முன்வராத நிலையில் ஆசிரியர் சம்பளத்துடன் நாங்கள் அதிபர்களாகச் சேவையாற்றி வருவதைத் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

வவுனியா மாவட்டத்தில் பதில் கடமை புரியும் 65 அதிபர்களுக்கு இச்சந்தர்ப்பத்திலும் இந்நியமனம் நிரந்தரமாகக் கிடைக்கப்படாவிடின் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும் அத்துடன் ஆசிரியர், அதிபர் சமூகத்தின் மத்தியில் நாம் ஏளனத்துக்குரியவர்களாகக் கருதப்படுவோம். எனவே தாங்கள் இவ்விடயதில் அதிகளவு அக்கறை எடுத்து இந்நியமனம் தொடர்பாக இதுவரை காலமும் பின்பற்றப்பட்டுவந்த கொளகையை அடிப்படையாகக் கொண்டு தற்போது கடமை புரிந்துவரும் சகல பதில் அதிபர்களையும் நிரந்தரமாக்குவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (க)

# குடாநாட்டைவிட்டு வெளியேற 3 இராணுவத்தினருக்குத் தடை

கடந்த செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி கரணவாய்ப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது படையினரின் துப்பாகிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பலியானது தொடர்பாக -

பருத்தித்துறை நீதிமன்றத்தில் இராணுவக் கப்டன் ஒருவர் உட்பட மூன்றுபேரை நெல்லியடிப் பொலீஸார் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர் செய்தனர். கப்டன் ரவீந்திரநாயக்க, சிப்பாய்களான வி.எஸ்.பி.வடபதிகேசுணந்த, ஜீ.ஏ.கே.லலித்குமார ஆகியோரே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

இவ்வழக்கின் சந்தேக நபர்களான கப்டன் ரவீந்திரநாயக்கவுக்கு 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையும், 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையும, சிப்பாய்களுக்கு தலா 10 ஆயிரம ரூபா ரொக்கப்பிணையும், 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையும் வழங்கி, வழக்கு முடியும்வரை யாழ்குடாநாட்டை விட்டு வெளியேறக் கூடாது என நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார். (அ-117)

# நயினை ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

நெடுந்தீவு,ஜுன்19

நயினாதீவு அரசினர் வைத்தியசாலையில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்திய அதிகாரி கூறினார்.

இரத்த அழுத்தம், நீரிழிவு, முட்டு வியாதி ஆகியவற்றிற்குப் பயன்படுத்தும் நிப்பிடிப்பின், டயனேல், மெற்போமிங், வென்ரோல் போன்ற மருந்து வகைகளும் காயத்துக்கு கட்டுவதற்கான பண்டேஜ், பிளாஸ்ரர் ஆகியவற்றிற்குத் தட்டுப்பாடு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-111)

# புதிய கல்விச் சீர்திருத்தமும் ஆசிரியர் கடமைகளும் மாணவர் எதிர்காலத்தை எப்படி மாற்றி அமைக்கும்?

அரசின் புதிய கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டம் இதுவரை வெற்றிகரமாக மூன்று ஆண்டுகளைக் கடந்துவிட்டது. இதனால் நாடு பெற்ற பயன் என்ன? பெறுகின்ற பயன் என்ன? என்ற ஐயங்கள் இயல்பான ஒன்றாகும். தேசிய அளவில் அதன் வினைத்திறன்மிக்க வெளிப்பாடுகளை ஆராய்வதற்கு முன்னர் எமது பிரதேசமட்டத்தில் 1998 இன் பின்னான காலப்பகுதியில் இந்த சீர்திருத்தங்கள் மூலம் நாம் கண்ட சாதனைகளையும் வேதனைகளையும் சற்றே சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்றைய கணிப்பீட்டு மையக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக அரசு எதிர்பார்த்த மாற்றங்கள் எவ்வளவு தூரத்திற்கு பயன்பாட்டுத் தன்மையைப் பெற்றுள்ளது என்பது பெரிய கேள்விக்குறியாக்கப்பட வேண்டிய விடயமாகும். இவை தொடர்பான கருத்துக்கள் ஆசிரியர், மாணவர், பெற்றோர் எனும் முத்தரப்பினர் மத்தியில் எவ்வகையில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பது முக்கியமான விடயமாகும்.

### பெற்றோர் எதிர்பார்ப்பு

தமது பிள்ளைகள் அறிவுபெற்றவர்களாகவும், படித்தவர்களாகவும் எதிர்காலத்தில் திகழ வேண்டும் என்பதில் எந்தப் பெற்றோருக்கும் முரணான கருத்து நிலவ முடியாது. எனினும் அந்த அறிவைப் பெறும் வழிகள் எவை? முன்னர் இருந்த நிலைமைகளை விடவும் அதனைப் பெறுவதில் மேலும் எவ்வகையில் முன்னேற்றகரமான விடயங்களைச் சேர்க்கலாம் என்பதில் எம் பெற்றோர் அக்கறை கொள்வதில்லை. ஆயினும் இன்றைய பெற்றோர் பிள்ளைகளுக்குப் பொருத்தமான முறையில் கற்றல் வசதிகளை ஏற்படுத்தத் தவறுவதுடன், தமது பொருளாதார அந்தஸ்துக்குப் பொருத்தமான முறைகளில் கல்வியைப் பிள்ளைகளிடத்தில் திணித்துவிடுகின்றனர். தம் பிள்ளைகளை எப்பாடுபட்டாவது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைக்கவேண்டும். இல்லையேல் பணம், செல்வாக்கு ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி பிரபல்ய பாடசாலைகளில் சேர்த்துவிடுதல் வேண்டும். இதுவரையில் தமது கடமைகள் நிறைவேற்றப்பட்டுவிடுவதாகப் பெற்றோர் நினைக்கின்றனர். இதனால் உலகைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத வயதில் பல பிள்ளைகள் தமது பெற்றோரின் கௌரவத்திற்காகப் பரீட்சை மண்டபங்களில் பந்தயக் குதிரைகளாக மாற்றப்படுகின்றார்கள்.

'நீ பரீட்சையில் சித்தியடையாவிட்டால் வெளியில் நான் தலை காட்ட முடியாது.'

இது பெற்ற தாயாரின் புலம்பல்.

"நான் வேலைத்தளத்தில் தலை குனியவேண்டி வரும்."

இது வளர்த்த தகப்பனின் புலம்பல்.

ஐந்தாம் தரத்தில் கற்கும் பிள்ளை பெற்றோரின் கௌரவத்தைக் காக்கும் நிலையில் தன் கல்விக்காகப் போராடவேண்டியுள்ளது. எனவே கல்வியைக் குறுகிய கால எழுத்துப் பரீட்சையின் முடிவாகக்கொள்ளும் பெற்றோர் மத்தியில் இன்றைய கணிப்பீட்டு முறை கலாசாரம் கடந்த காலங்களில் பல விமர்சனங்களைக் கண்டுள்ளது. தவணை முடிவில் கொடுக்கப்படும் மாணவர் தேர்ச்சி அறிக்கைகள் அவர்களது பிள்ளைகளின் அறிவுநிலை மட்டங்களைப் புள்ளி ரீதியாகத் தெளிவுபடுத்தின. இன்று வழக்கத்திற்கு மாறாகப் பாடசாலைகளில் வழங்கப்படும் மாணவர் முன்னேற்றக் கணிப்பீட்டு அறிக்கைகள் (**STUDENT PROGRESSING REPORT FOR SBA**) பெற்றோருக்கு விளங்காத தலையிடியைக் கொடுக்கின்றன. இதற்குக் காரணம் அவர்களது காலங்களை விடவும் இன்றைய காலகட்டத்தில் கல்வியின் நோக்கங்கள், மறுசீராக்கங்கள் பற்றிய விளக்கம் பெற்றோர் மத்தியில் காணப்படுவதில்லை. அல்லது அவை தொடர்பான விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வதில்லை - எனலாம்.

### மாறிவரும் கல்விச் சிந்தனைகள்

முன்னைய காலங்களில் கல்வி கற்றல் என்பது குருகுல அடிப்படையில் ஆரம்பித்துப் பின்னர் பாடசாலைகள் என்னும் நிறுவக மையப்படுத்தலுக்கு உட்பட்டது. அதன் பின்னரே முறையான கல்விக்கு ஒரு கலைத்திட்டத்தின் தேவைகள் உணரப்பட்டது. எனவே கல்விச் சீர்திருத்தங்களின் சிந்தனை மாற்றங்கள் கலைத்திட்டங்களில் பிரதிபலிப்பதை இனங்காண முடிகின்றது.

எமது நாடு காலத்திற்குக் காலம் தனது கல்வி முறையை மாற்ற வேண்டிய தேவைக்கு உட்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. சமூக மாற்றம்
2. அரசியல் மாற்றம்
3. பொருளாதார மாற்றம்

எனினும் நாடு பூராகவும் அமுல் படுத்தப்படும் பொதுக் கலைத்திட்டத்திற்கான நோக்கங்கள் (**AIMS**) தேசிய குறிக்கோள்கள் என அழைகக்கப்படுகின்றன.

தேசிய குறிக்கோள்கள் மாற்றமடைகின்றபோது கல்விச் செயற்பாடுகளில் பொதுவாகப் பின்வரும் விடயங்கள் மாற்றமடையலாம்.

1. கல்வி நிர்வாகம்
2. பாடத்திட்டம்
3. கற்றலுக்கான மதிப்பீட்டு வேலைத்திட்டம்
4. பாடசாலைக் கற்றலுடன் தொடர்பான ஏனைய விடயங்கள்

**நவீன விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்கள்** → **தேசிய குறிக்கோள்களில் மாற்றத்தை ஏற்படுத்துதல்** →

- → **கல்வி நிர்வாக மாற்றம்**
- → **பாடவிதான மாற்றம்**
- → **மதிப்பீட்டுமுறை மாற்றம்**
- → **ஏனைய விடயங்கள்**

இந்த வகையில் பொதுவாக -

1. தேசிய குறிக்கோள்களை அறிதல்

2. பாடவிதான மாற்றம், மதிப்பீட்டு முறை என்பனவற்றை அறிதல் போன்ற விடயங்களில் தெளிவான விளக்கங்கள் கற்கும் சமூகத்தினிடம் இருப்பது அவசியமானதாகும்.

### தேசிய குறிக்கோள்மூலம் அரசின் எதிர்பார்ப்பு

1992இல் கல்விக்கென அமைக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 9 தேசிய குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டன.

அவையாவன:-

1. தேசிய பிணைப்பினையும், தேசிய முழுமைப்பாட்டினையும், தேசிய ஒருமைப்பாட்டினையும் எய்துதல்.

2. வியாபக பாங்கான சமூக நீதியை நிலைநிறுத்துதல்.

3. ஓம்பக்கூடியதொரு வாழ்க்கைப் பாணி -, வாழ்க்கைப் பாங்கு என்பவற்றைச் சிறக்கச் செய்தல்.

4. ஒரே வேளையில் மன நிறைவையும், மேன்மையையும், தன்னிறைவையும் தரக்கூடிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

5. நாட்டின் வளர்ச்சியிலும் மனித வள விருத்தியிலும் யாவரும் பங்கு கொள்வதற்கான பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

6. ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் ஆழ்ந்த இடையறாத அக்கறையுணர்வு தொடர்ந்து பேணப்படுதலை உறுதி செய்தல்.

7. இன்று நாம் வாழ்ந்துகொண்டிருப்பதைப் போன்று ஒரு விரைவாக மாறிவரும் உலகில் மாறுகின்ற நிலைமைகளுக்கு இணங்கி வாழக் கற்றல்.

8. காப்புணர்வையும் உறுதிப்பாட்டு உணர்வையும் எய்தும் வகையில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை வளர்த்தல்.

9. சர்வதேச சமூகத்தில் கௌரவமான ஓர் இடத்தைப் பெறக்கூடியதாக இந்தத் தகைமைகளை விருத்தி செய்தல்.

இவ்வாறான தேசிய குறிக்கோள்களை நோக்கும்போது கற்றல் என்பது முன்னைய காலங்களை விடவும் சற்று வேறுபட்ட உருமாற்றம் ஒன்றைப் பெற்றுவிடுகின்றது. கடந்த காலங்களில் பாடமையமாக இருந்த கலைத்திட்டம் தற்சமயம் தகைமை மையக் கல்வி (**Competeincy Based Education**) என்ற நிலைக்கு மாறியுள்ளது.

இதன்மூலம் கற்றலை ஒரு வாழ்நாள் கருமமாகக் கொண்டு கற்க முன்வருவதன் ஊடாக, மாணவன் பல்வேறு மூலங்கள், பல்வேறு முறைகள் மூலம் கற்க முனைய வேண்டுமென அதாவது கற்றலுக்காகக் கற்கமுனைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவனது கல்வி, அவன் பாடசாலையில் பெறும் முறை சார்ந்த கல்விக்கு மாத்திரம் வரையறைப்பட்டிருத்தலாகாது. இதன்மூலம் முறைசாரா வழிகளிலும் முறைமையில் வழிகளிலும் மேன்மேலும் கல்வி பெறுவதற்குத் தேவையான தகைமைகளை மாணவரிடத்தே வளர்ப்பதே இன்றைய கல்வித்திட்டத்தின் நோக்கமாகும்.

மாற்றமடைந்துள்ள இன்றைய கல்வி முறைமையினால் வகுப்பறைக் கற்பித்தல் என்பது புதிய பரிமாணத்தை எய்தியுள்ளது. இதன்மூலம் ஒரு வகுப்பறையில் ஆசிரியரின் பங்கு என்பது இலகுவாக்குபவர் (**FACILITATOR**) என்ற நிலைக்கு மாற்றமடைந்துள்ளது. செயன்முறைக் கற்றல், வெளிக்களக் கற்றல், கண்டறிமுறைக் கற்றல், செயற்திட்டமுறைக் கற்றல், குழுமுறைக் கற்றல் என்பன வகுப்பறையில் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன. இத்தகைய கற்பித்தல் முறைமைகளுக்கு ஏற்ற வகையில் முன்னைய காலங்களைவிட பல புதிய விடயங்கள் உள்படுத்தப்பட்டுள்ளன.

அவை:-

**த.ஸ்ரீமுரளி**

1. பாடமேம்பாட்டுத் திட்டம்
2. ஒப்படை
3. செயற்பாட்டு அறை ஆகும்.

### புதிய சீர்திருத்தம் தொடர்பாக ஆசிரியர் மனப்பாங்கு

இன்றைய கணிப்பீட்டு கலாசார மதிப்பீட்டு முறை மாற்றங்கள் ஆசிரியரின் கடமைப் பாங்கில் பல விதமான மாற்றங்கள் எதிர்பார்க்கின்றது.

1. வகுப்பறையில் பிள்ளைகளை உளவியல் நோக்குடன் அறிவதுடன் அவர்களின் மீதான சீரான கண்காணிப்பு.

2. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம் பற்றிய அக்கறை.

3. விழுமிய மனப்பாங்கிற்கு ஏற்ற பிரஜைகளாகப் பிள்ளைகளை உருவாக்குதல்.

4. எதிர்கால உலகிற்குச் சவால் விடும் தற்காலப்படுத்தப்பட்ட மனிதர்களாக மாணவரை மாற்றி அமைத்தல்.

5. பாடசாலையை பிள்ளைகள் விரும்புகின்ற களங்களாக மாற்றி அமைத்தல்.

6. பல்வேறுபட்ட வாழ்க்கைத் தகைமை மிக்கவர்களாக வாழக் கற்றுக் கொடுத்தல்.

இவை போன்ற கடமைக் கூறுகள் தொடர்பாக ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். எனினும் மாணவர்கள் விடயத்தில் ஆசிரியர்கள் ஒரு சமூகப பொறுப்புள்ளவர்களாகவும் திணைக்கள மட்டத்தில் சிறந்த தொழிலாளியாகவும் கடமையாற்ற வேண்டியுள்ளது. சில வேளைகளில் மாணவர் மட்டத்தில் நற்பெயரைச் சம்பாதித்த ஓர் ஆசிரியர் திணைக்கள மட்டத்தில் அவர்களால் எதிர்பார்த்த கடமைகளைப் பூர்த்தி செய்யாதவராக நோக்கப்படவும் வாய்ப்புண்டு. புதிய கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளால் ஆசிரியர் கடமைகளில் ஆவணப்படுத்தல் தொடர்பான வேலைப்பழுக்கள் அதிகரித்துள்ளன.

**ஆசிரியர் கடமைக்கூறு**

- **A** கணிப்பீட்டு வேலைத்திட்டம் தொடர்பான ஆவணப்படுத்தல்
- **B** பாட மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான ஆவணப்படுத்தல்
- **C** இணைப் பாடவிதான கடமைக்கூறுகள்
- **D** தவணைப் பரீட்சை தொடர்பான பொறுப்புகள்
- **E** வகுப்பறை கற்பித்தல் தொடர்பான ஆவணப்படுத்தல்
- **F** பாடசாலை நிர்வாக கடமைக்கூறுகள்

மேலே காணப்படும் கடமைக் கூறுகளில் **A,B** என்பன சற்று வேலைப் பழு மிக்க கடமைகள் ஆகும்.

**A** தொடர்பான -

1. கணிப்பீட்டுப் பரீட்சைகளைத் திட்டமிடல்.

2. கணிப்பீட்டு மாதிரிகளை உருவாக்குதல்.

3. கணிப்பீட்டுப் பரீட்சைகளைத் திருத்தி புள்ளி வழங்குதல்.

4. கணிப்பிடும் சந்தர்ப்பங்களில் மாணவர் புறநிலை நடத்தைகளை அறிக்கைப்படுத்தல் (செவ்வை பார்த்தல்)

5. பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுத்தல்.

6. நலிவான மாணவரை இனங்காண்பதற்கான முனைவு வரைபை வரைதல்.

7. தவணை முடிவில் மாணவர் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தல் போன்ற வேலைத்திட்டங்கள் மூலம் ஆசிரியர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பொதுவாக அவர்கள் ஓர் எழுதுவினைஞர் போன்ற நிலைக்கு தற்சமயம் மாற்றப்பட்டுள்ளனர் எனலாம். மேலும் இன்றைய கல்விச் சீர்திருத்த நடைமுறைப்படுத்தலில் பாடசாலை சூழல் வளங்கள், ஆளணி வளம் போன்றவை பிரதான பங்கு வகிக்கின்றன. குறிப்பாக வடக்கு - கிழக்கில் உள்ள பின் தங்கிய பாடசாலை ஆசிரியர்களால் அண்மைக்காலங்களில் இப்பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் கடமை ஆற்றும் ஆசிரியர்கள் மூலம் மேலதிகமான வேலைப்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இன்று நகர்ப்புற பாடசாலைகளைவிட கிராமப் புற பாடசாலைகளில் ஆசிரியரின் தொழிற்பாடுகள் பெரிய அளவில் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் அதற்கான வழிவகைகள் அரசால் சரியான மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

### தொழில் பாங்கான ஆசிரியரை இனங்காணல்

தற்சமயம் சமுதாயத்தில் இனம் காணப்படும் நல்லாசிரியர் என்பவருடைய அடிப்படை அம்சம் யாது எனச் சிந்தித்தால் அது நிச்சயம் அவரது வகுப்பறைக் கற்பித்தல் சார்ந்ததாக மட்டுமே இருந்து வருகின்றது. ஒரு சிறந்த ஆசிரியரை இனங்காண்பதற்கு இது மட்டும் போதுமானதா? என்ற கேள்வி எழுகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக சகல தரப்பினரும் திருப்திப்படத்தக்க ஒரு நிறுவனமாக பாடசாலைகள் திகழ வேண்டுமாயின் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்கள் தரக் கணிப்பீட்டுக்கு உற்படுத்தப்படல் வேண்டும் என அரசு நிர்ப்பந்தித்துள்ளது.

எனவேதான் 2001 இல் இருந்து நாட்டில் கடமையாற்றும் ஆசிரியர் தொடர்பாக தனிப்பட்ட ரீதியாக செயலாற்றுகை தரங்கணிப்பு பற்றிய விடயம் முன் மொழியப்பட்டுள்ளது. இதனூடாக பாடசாலைக் கல்வியின் பண்பு ரீதியான தரத்தினை உயர்த்துதல், தலைமைத்துவம், முகாமைத்துவத்திறன் என்பவற்றை விருத்தி செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம் ஒவ்வொரு ஆசிரியரும் தமது தனிப்பட்ட திறன்களை வெளிக் கொணரும் முகமாக கடமைப் பாங்குகள் ஐந்தாக வகுக்கப்பட்டுள்ளன.

1. கற்றல் - கற்பித்தல் செயற்பாடு.

2. இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்.

3. மாணவர் நலன், ஆலோசனை.

4. பாடசாலைக்காகச் செய்யும் மேலதிக சேவை.

5. பாடசாலைச் சமூகத் தொடர்புகள்.

இம்முறை மூலமாக எதிர்காலத்தில் ஆசிரியர் தொழில் தொடர்பாக சமுதாயப் பார்வையை மறுமலர்ச்சியானதாக மாற்ற முடிவதுடன் வகுப்பறைக் கற்பித்தலுக்கு அப்பாலும் ஆசிரியரின் ஆளுமைப் பரப்பை விருத்தியடையச் செய்யலாம். ☆




யாழ்.மாநகர சபை ஆணையாளராகக் கடமையாற்றிய இராசா தணிகாசலத்துக்கு யாழ். மாநகர சபையினர் அண்மையில் பிரிவுபசார வைபவம் ஒன்றை நடத்தினர்.

யாழ்.மாநகர மேயர் ந.ரவிராஜ் தணிகாசலத்துக்குப் பொன்னாடை போர்த்துவதை முதல் படத்தில் காணலாம்.

ஆணையாளருடன் மாநகர சபை உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட படத்தை அடுத்துக் காணலாம்.

# தியாகிகள் தினம்

## 19 ஜூன் 2001



சமூகத்தின் விடிவுக்காக உழைத்த இவர்கள் அரச படைகளின் அடக்குமுறைக்கும், எமக்குள் வளர்ந்த அராஜகப் போக்குக்கும் பலியாகிப்போனார்கள். இவர்கள் கொண்டிருந்த இலட்சியம், இவர்களது சிறப்புக்கள் எல்லாம் இவர்களது உடலோடு அழிந்து விடவில்லை; அழிந்துவிடாது என்பதே புரிந்துகொள்ளப்பட வேண்டிய உண்மை.

(89177)

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)**

யாழ். பிராந்திய அலுவலகம் 310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# முல்லைக் கடலுக்குச் சென்ற இரு மீனவரைக் காணவில்லை

## தாக்குதலில் படகு எரிந்து நாசம்

வவுனியா, ஜூன் 19

முல்லைத்தீவுக் கடலில் கடந்த வியாழக்கிழமை மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் கடற்படையினரின் தாக்குதலைத் தொடர்ந்து காணாமற் போயுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

முல்லைத்தீவு, மாத்தளன் பகுதியில் இருந்து மீன் பிடிப்பதற்காகச் சென்ற சம்பந்தப்பட்ட இரு மீனவர்கள் மீதும் முல்லைக் கடலில் ரோந்து வந்த கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும்—

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சிக்கிப் படகும், மீன்பிடி உபகரணங்களும் எரிந்து சாம்பலாகின என்றும் கூறப்படுகிறது. படகில் சென்ற இரு மீனவர்களுக்கும் என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. (க-6-9)

# யாழ். மின்சார நிலைய வீதியில் காவலரண்கள் நகர்த்தப்பட்டன

## மாநகரசபை மலசலகூடப்பகுதியையும் பயன்படுத்தலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். நகரில் மத்திய பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக உள்ள மின்சார நிலைய வீதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரண்கள் மேலும் சுமார் 50 மீற்றர் தூரத்துக்குப் பின்னோக்கி நகர்த்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்தப் பகுதியில் இருந்த யாழ். மாநகர சபையின் பொறுப்பில் இருந்த 6 மலசலகூடங்கள் பொதுமக்களின் பாவனைக்கு கிட்டியுள்ளது. எனினும் அவை சேதமடைந்துள்ளதால் உடனடியாக பொது மக்கள் உபயோகப்படுத்த முடியாத நிலை உள்ளது.

யாழ். மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதால் மலசலகூடங்களை புனரமைக்கும் பணியை உடனடியாக ஆரம்பிக்க முடியாதுள்ளதாக யாழ். மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்சார நிலைய வீதியில் இருந்த தனியாருக்குச்சொந்தமான 8 கடைகளும் புனரமைக்கப்பட்ட பின்னர் திறக்கக் கூடியதாக உள்ளன. கடை உரிமையாளர்கள் நேற்றைய தினமேபுனரமைப்புப்பணியில் ஈடுபட்டிருந்ததையும் காண முடிந்தது.

விடுவிக்கப்பட்ட பகுதியை தனியார் பஸ் தரிப்பிடமாகவும் பயன்படுத்த முடியும் என்று மினிபஸ் சாரதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் படையினரால் யாழ். பஸ் நிலையப் பகுதி முட்கம்பி வேலிகள் அகற்றப்பட்டபோதிலும் வடபிராந்திய போக்குவரத்து சபையின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று மீண்டும் அந்த வேலி போடப்பட்டது. (க-6)

# வடமராட்சி அகதிமுகாம்கள் குடிசைகள் சேதமான நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு வடமராட்சியில் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் பல அகதி முகாம்கள் மற்றும் குடிசைகள் சேதமடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளன.

குடிசைகள் யாவும் கூரைகள் பழுதடைந்தும், கூடாரங்கள் கடும் காற்றுக் காரணமாகக் கிழிந்தும், சேதமடைந்தும் காணப்படுகின்றன.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை, துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். மழைக்காலம் வந்தால் இம்மக்கள் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர்.

இந்த முகாம்களை அமைத்துக் கொடுத்தவர்களோ. வேறு நிறுவனப் பிரதிநிதிகளோ இதைக் கவனத்தில் எடுப்பார்களா என அம்மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-15)

## குற்றம் ஏதும் சுமத்தப்படாமல்

# தடுத்து வைக்கப்பட்டிருப்போர் வழக்கு விசாரணைக்கு வரும்

## மேல்மன்றுக்கு சட்டமா அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

பயங்கரவாதத் தடைச்சட்டம், மற்றும் அவசர காலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இதுவரை குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாமல் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் வழக்குகள் யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைகளுக்காக எடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை சட்டமா அதிபர் திணைக்களம், யாழ். மேல் நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது.

இதனையடுத்து யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சின்னத்தம்பி தயாபரன் என்பவரது வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைகளுக்காக எடுக்கப்பட்டு —

எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஏனைய சந்தேக நபர்கள் மீதான வழக்குகளும் மிக விரைவில் மேல் நீதிமன்றில் விசாரணைகளுக்காக எடுக்கப்படவுள்ளதாக யாழ். மேல் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். (க-6)

# கொள்கையில் உறுதியாக நின்று போராடியவர் தலைவர் பத்மநாபா

## தியாகிகள் தினத்தையொட்டி பெருமாள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 19

மனிதாபிமானம், ஜனநாயக உணர்வு, எளிமை என்பன தோழர் பத்மநாபாவின் அருங்குணங்கள். கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்றலும், ஓய்வொழிச்சல் இல்லாத உழைப்பும் அவரது தாரக மந்திரங்கள.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரும், வடக்கு — கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அ. வரதராஜப் பெருமாள்.

ஈ.பி,ஆர்,எல்.எவ் அமைப்பினர் பத்மநாபா ஞாபகார்த்தமாக வருடந்தோறும் அனுஷ்டித்து வரும் ''தியாகிகள் தினம்'' இன்றாகும். அதனை ஒட்டி வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அ. வரதராஜப் பெருமாள் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தோழர் பத்மநாபா மறைந்து 11 அண்டுகள் உருண்டோடி விட்டன. தனது 39 ஆவது வயதில் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட அவர் ஒரு சரித்திரமாகவே வாழ்ந்தார். அவரது மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவு என்றால் அது மிகையல்ல.ஈழமாதா 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பெற்றெடுத்த ஒரு சிறந்த தலைவர் அவர்.

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் சுமித் சக்கரவர்த்தி அதிர்ந்து பேசாத செயலாளர் நாயகம் என அவரது படுகொலையின் போது ''மெயின் ஸ்ரீம்'' (Main Stream) என்ற சஞ்சிகையில் எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் விவரித்திருந்தார். வசீகரமான தோற்றமும் ஊடுருவிப் பாயும், ஒளிரும் கண்களும், தளம்பா நிறைகுடமான துல்லியமான அறிவும் அவரை நோக்கி பல்லாயிரம் தோழர்களை காந்தம் போல் ஈர்த்தன.

அவரிடமிருந்து கற்க வேண்டிய பல விடயங்கள் இன்றைய தலைமுறையினருக்கு உண்டு. ஈழத்து தலைவர் ஒருவரது மரணத்தில் தமிழகம் முழுவதும் சோகக்கடலில் மூழ்கியது தோழர் பத்மநாபாவின் மறைவின் போது தான். அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஆயிரமாயிரம் மக்கள் கூட்டம் அவர் எவ்வளவு தூரம் சர்வதேசியவாதியாக இருந்தார் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

இலங்கையில் அவர் வேலை செய்யும் போது மலையக பாட்டாளி வர்க்கம் வடக்கு கிழக்கின் தொழிலாளர் விவசாயிகள், சிங்கள முற்போக்கு புத்திஜீவிகள்என சகலரிடமும் அளவு கடந்த பேரபிமானம் கொண்டிருந்தார். தோழர் பத்மநாபாவுடன் ஒரு நாள் பழகிய மனிதர் கூட தனது வாழ்க்கை முழுவதும் அவரை மறக்கமாட்டார்.

தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சியாளர்கள் அமைப்பு என அவரது அரசியல் இயக்கம் விடாது தொடர்ந்தது. 1979 இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் இளைஞர்களின் உயிர்களை காவுகேட்டபோது மயிரிழையில் உயிர்தப்பியவர் அவர். பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முன்னணிப் பாசறையில் பயிற்சிபெற்றவர் பத்மநாபா.

இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் காலஞ்சென்ற தலைவர்களில் ஒருவரான தோழர் பி. ராமமூர்த்தியுடன் சென்று அன்னைஇந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து எமது பிரச்சினைகளை எடுத்துரைத்த முதல் இளந்தலைமுறைத் தலைவர்அவர். இதனால் தமிழக, இந்திய, இலங்கையின் முற்போக்கு இடதுசாரி அரசியல் தலைவர்கள் இளந்தலைமுறையினர் மத்தியில் அன்புக்குரியவராகவும், மரியாதைக்குரிய ஒருவராகவும் போற்றப்பட்டார்.

ஈழச் செய்தி தொடர்பகம் என்ற ஒரு செய்தி நிறுவனத்தை 80 களின் முற்பகுதியில் சென்னையில் நிறுவி ''ஈழச் செய்திகள்'' என்ற ஒரு செய்தித் தொகுப்புச் சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். உணவுக்கு பணம் இருக்கிறதோ இல்லையோ இந்த சஞ்சிகை மாத்திரம் மாதம் தவறாமல் வந்துவிடும். ஈழத்தின் எல்லா மாவட்டங்களிலும் இளைஞர்கள் மத்தியில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதும் ஈழ மக்களின் விடுதலையின் மீதும் ஈடுபாட்டைத் தட்டியெழுப்பியவர்.இந்தத்தாடிக்கார இளைஞனின் விடாப்பிடியான உறுதிபற்றி அப்போதைக்கு அப்போது இந்தியாவின் பிரபல தினசரிகள் தொடக்கம் முற்போக்கு சிற்றிதழ்கள் வரை எழுதி வந்தன.

ஜனநாயகம் நிலவும் சமூகத்தில் அவர் அவதரித்திருந்தால் அவர் மாபெரும் தலைவராக இன்றும் இருந்திருப்பார். ஆனால் எமது சமூகத்தில் உள்ளிருந்தே கொல்லும் பாசிசம் அதற்கு இடமளிக்கவில்லை.

இன்று சொந்தச் சமூகத்தையே அரித்துத் தின்னும் கறையான்கள் பெரிய மனிதர்களாக வேசம் காட்டித் திரிவதைக் காண்கிறோம். ''பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்'' என்று பாரதி சொன்னதை உண்மைகளாகக் காண்கின்றோம்.

ஒரு சிறிதளவும் சுயலாபமில்லாமல் அர்ப்பண உணர்வுடன் செயற்பட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்கள், மரணித்தவர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை சரித்திரத்தில் பதியப்பட வேண்டும். பொய்கள் தற்காலிகமாகவே கோலோச்சும். ஆயிரம் கைகள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லையல்லவா?

மறைந்த தோழர் நாபாவுக்கும் அவரோடு சாவிலும் இணைபிரியாது சென்ற தோழர்கள் யோகசங்கரி, கிருபா, மற்றும் தோழர்களுக்கும், ஈழமக்களின் ஜனநாயகத்துக்காகவும், சுதந்திரமான வாழ்வுக்காகவும் சமூகத்தின் உள்ளும் புறமும் போராடி மரணித்த அனைத்துத் தோழர்களுக்கும், போராளிகளுக்கும் எமது அஞ்சலியைச செலுத்துகின்றோம்.

—என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## அதிபர்கள் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் தொடர்பு கல்வித்திட்டத்தின் கீழ் உலக வங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தினரால் 15 நிலைகளுக்கு தொடர்கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான இத்தொடர் கருத்தரங்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெறும்.

கூட்ட முகாமைத்துவம் தொடர்பான முதலாவது கருத்தரங்கு நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து நேர முகாமைத்துவம், அனுபவங்களைப் பகிர்தல் தொடர்பான கருத்தரங்குகள் அதிபர்களுக்கும் —

அழகியல் உணர்வை மேம்படுத்துதல், கணிப்பீட்டுக் கருவிகள் தயாரித்தல் செயற்பட்டறை தொழிற்பாடு, விழிப்புல வலுவிழந்த மாணவரைக் கற்பித்தல், உபகரணங்கள் தயாரித்தல், பாட அறிவை மேம்படுத்தல் போன்ற பல தலைப்புக்களில் பொருத்தமான ஆசிரியர்களுக்கு இக் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. (க-152)

## பழுதடைந்த பிஸ்கட்டுகள் விற்பனை

சுன்னாகம், ஜூன் 19

யாழ்ப்பாணத்தில் பரவலாகப் பழுதடைந்த பிஸ்கட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலாவதியாகும் திகதி போடப்பட்டுள்ள இடங்களில் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டு இவ் பிஸ்கட்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு திகதி அழிக்கப்பட்ட இடங்களில் புதிய திகதிகள் அச்சிடப்பட்டும் விற்பனை செய்யடுவதாகக் கூறப்படுகின்றது. (ம-27)

## மாணவி மீதானபலாத்கார குற்றச்சாட்டில்

# இராணுவத்தினருக்கு எதிராக மேல்நீதிமன்றில்வழக்குத்தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

புலோலிப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரை குற்றமுறையிலான பலாத்காரம் செய்ய முற்பட்ட இரு இராணுவத்தினருக்கு எதிராக நேற்று யாழ். மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரால் தண்டனை சட்டகோவை இல. 357 இன் கீழ் குறித்த நபர்கள் தண்டனைக்குரிய குற்றம் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்ட குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மாலிசந்தி இராணுவ முகாமில் பிணையில் உள்ளவர்களான அப்புஹாமி லாகே சிசிரமார கன்னங்கர மற்றும் கிரிபிட்டிகே சுகத்பிரியந்த பெரேரா ஆகிய இருவருக்கும் கடந்த வருடம் மே மாதம் 17 ஆம் திகதி 13 வயது மாணவி ஒருவரைப் பயமுறுத்திப் பலாத்காரம் செய்யமுற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் —

படையினரால் கைது செய்யப்பட்டுப் பருத்தித்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டபின் நீதிமன்றால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க-6)

# வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மக்கள் குறைநிவர்த்தி சேவை

வலி.தென்மேற்கு,ஜூன்19

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மூன்றாவது தடவையாக மக்கள் குறைநிவர்த்தி சேவை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிககு நவாலி சென்.பீற்றர் றோ.க.த.க. பாடசாலையில் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும்.

இந்த மக்கள் குறைநிவர்த்தி சேவையில் நவாலி வடக்கு, நவாலி கிழக்கு, நவாலி தெற்கு, மானிப்பாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்களின் தேவை கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. ரூபா 25 ஆயிரம் வீடமைப்பு நிதி பெறுதல், பிறப்பு - இறப்பு சான்றிதழ் பெறல், வீதிப் போக்குவரத்து, மின்சாரம், மற்றும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் முக்கியமாக ஆராயப்படும்.

மேற்படி சேவையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சேவையாற்றவுள்ளனர். (ம-185-90)

## கொடிகாமத்தில் நடமாடும் வைத்திய நிலையம்

கொடிகாமம்,ஜூன்19

தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கென நடமாடும் வைத்திய நிலையம் கொடிகாமம் கிராம சபை அலுவலகத்தில் வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

வரணி ஆஸ்பத்திரியில் பணிபுரியும் டாக்டர் வே.ஆறுமுகம் நடமாடும் வைத்திய நிலையத்தில் சிகிச்சையளித்து வருகிறார்.

முன்னர் இந்தச் சிகிச்சை நிலையம் உசனில் நடத்தப்பட்டு வந்தது. (க-117)

## தீவக வலயக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்19

கல்வி அமைச்சின் பாடசாலை அபிவிருத்தி ஆலோசனைப் பிரிவினது அனுசரணையுடன், தீவக கல்வி வலயம் நடத்துகின்ற கண்காட்சி, இன்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் ஆசிரியரினதும் மாணவரினதும் ஆக்கத்திறன்களை அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலும், தற்போது நடைமுறையிலுள்ள புதியகல்வி சீர்திருத்த செயற்பாட்டினுள் பெறப்பட்டுள்ள முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் நோக்கிலும், பாடசாலைப் பாடத்திற்கு தொடர்புடையதாக ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

இக்கண்காட்சியை வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைப்பார். மூன்று பிரிவுகளாக நடைபெறும் இக்கண்காட்சியில் சிறந்த ஆசிரிய, மாணவ ஆக்கத்திற்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (க)

## கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நிதியுதவி

காரைநகர்,ஜூன்19

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் காரைநகர் வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 60 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

சங்க அங்கத்தவர்களின் கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் முகமாக சங்க அங்கத்தவர்கள் ஆறு பேருக்குத் தலா பத்தாயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன் வழங்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர் தலைமையில் நடைபெற்ற போது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் பயனாளிகளிடம் நிதியைக் கையளித்தார். (க-73)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

21,200 தொடர் இலக்கமுடைய கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட ஓட்டோக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 23, உடுவில் வீதி, மானிப்பாய். (89162)

கடைக்குத் தேவையான நல்ல நிலையிலுள்ள கண்ணாடி அலுமாரிகள், மேடைத்தராசு, சோக்கேஸ், மேசை, ஒருசோடி இரும்புக்கேற் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:-600, நாவலர் வீதி, (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக), அரியாலை. (89122)

### இலக்கியக் கட்டுரைகள்

A/L மாணவர்களே! இலக்கிய விமர்சனம் என்றால் என்ன? சிறுகதை மதிப்பீடு என்றால் என்ன? எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'இலக்கியக் கட்டுரைகள்' என்ற நூலை வாசியுங்கள். (89157)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உள்ளனர். சனி, ஞாயிறுகளில் உடனுக்குடன் குறிப்பு பார்த்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (89174)

### தேவை

ரொட்டி, அப்பம் மற்றும் இறைச்சி வகைகள் சமைக்கக்கூடிய வேலையாள் தேவை. தொடர்பு S.பற்றிக், உயரப்புலம், ஆனைக்கோட்டை. (89172)

## அவசர கலந்துரையாடலுக்கான அழைப்பு

யா/298 மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள், ஆலயங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரையும் நாளை (2001-06-20) புதன்கிழமை காலை 09.00 மணிக்கு இனுவிலில் இயங்கும் தெ.மே.ப.நோ.கூ.சங்கத் தலைமைக் காரியாலயத்துக்கு வருகைதருமாறு பணிவன்டன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவர்,
செ.ஆனந்தரஞ்சன்
பாரதி சனசமூக நிலையம்.

*மறவன்புலோ,*
*சாவகச்சேரி* (89178)

## நன்றி கூறுகின்றோம்

யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் புதிய இருமாடிக் கட்டட உருவாக்கத்துக்கு அத்திவாரமிட்டு ஆரம்ப நிதி உதவி வழங்கி ஊக்குவித்த

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் மொழி விவகாரங்கள அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்





யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.
நாடாளுமன்ற உறுப்பினர்களான
**உயர்திரு. சி.தவராசா**
அவர்களுக்கும்

**உயர்திரு.**
**கா.வே.குகேந்திரன்**
**(ஜெகன்)**
அவர்களுக்கும்



எங்கள் பாடசாலைக்கு நேரடியாகப் பலமுறை வந்து பார்வையிட்டு பாடசாலையின் தேவையைப் பரிந்துரைத்து ஆவன செய்த நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவரும் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. உதவி அமைப்பாளருமான




**உயர்திரு.**
**க.மணிபல்லவராஜன்**
**(நிசாந்தன்)**
அவர்களுக்கும்

**எமது உளங்கனிந்த நன்றிகள்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம், பாடசாலைச் சமூகம்.

(89173)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.பாலகிருஷ்ணன் இரகுநாதன்**
*(அதிபர்,*
*புலோலி.மெ.மி.த.க.வித்தியாலயம்)*

எமது வித்தியாலய அதிபர் திரு.பாலகிருஷ்ணன் இரகுநாதன் அவர்கள் 1-1-1994 இலிருந்து அதிபர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையை அக மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் தமது சேவையில் மேலும் உயர்வு பல பெற்று சகல செல்வங்களுடன் நலமாக நீடூழி வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

உபஅதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

**புலோலி.மெ.மி.த.க.வித்தியாலயம்** (89175)

## மாபெரும் நூல் அறிமுகவிழா


*இடம்* : யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி
*நாள்* : நாளை (20.06.2001) புதன்கிழமை
*நேரம்* : மதியம் 1.30 மணி
*தலைவர்* : Rtn. N.வன்னியசிங்கம் (அதிபர்)
*நூல்* : உலகெங்கும் மிகவும் செறிந்திருக்கும் *ஸ்ரீமத் பகவத்கீதை* அத்தியாயம் I&II

*உலக நடைமுறைக்கு மிகவும் ஏற்ற நூலின் ஆசிரியர்:*
உலகளாவிய தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சங்கம்
வணக்கத்துக்குரிய (பேலூர்மடம், கல்கத்தா)
**ஸ்ரீமத் சுவாமி ரங்கநாத்தானந்தர் மகராஜ்**

*நூல் அறிமுகவுரை:* **சுவாமி சித்ரூபானந்தா**
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

முக்கிய குறிப்பு:
கல்விப் பொதுத் தராதர வகுப்பு
மாணவர்களுக்கு மட்டும். (C/17141)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**வேலுப்பிள்ளை நாகரத்தினம்**

21.06.2001 இல் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வகைகளிலும் எமக்கு உதவிகள் செய்தவர்கள், அனுதாபங்களைத் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (20.06.2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன், பேரப்பிள்ளைகள்.**

நிரந்தர முகவரி:-
*வங்களாவடி,*
*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:-
*இடம்பெயர்ந்தோர் முகாம்,*
*இந்திர அம்மன்கோயிலடி,*
*துன்னாலை.*

(89185)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உதைபந்தாட்ட விளையாட்டுக்காகவே
தம்மை அர்ப்பணித்த
திருவாளர்
தம்பிப்பிள்ளை இரட்ணசிங்கம்
(முன்னாள் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் - பரு. ஐக்கிய விளையாட்டுக்கழகம், முன்னாள் ஆசிரியர் - யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
அவர்கள் உதைபந்தாட்டத்தில் அகில இலங்கை தேசிய விருது
பெற்றதையிட்டு மனம்மகிழ்ந்து
எமது ஆசானைப் பாராட்டிவாழ்த்துகின்றோம்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்,
பருத்தித்துறை.

(89188)

# நயினை நாகபூஷணி ஆலய உற்சவ ஏற்பாடுகள் பூர்த்தி

நெடுந்தீவு,ஜூன்19

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினா தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதனை முன்னிட்டு மஹோற்சவம் தொடர்பான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராஜா தெரிவித்துள்ளார்.

யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு போக்குவரத்து, குடிநீர், சுகாதார சேவைகள் சிறப்பாக இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் - தொண்டர்கள் சேவையும் வழமைபோல் இடம்பெறும் எனவும் - அவர் தெரிவித்தார்.

உற்சவ காலங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களிலும் தினமும் சுமார் 250க்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் அம்பாளைத் தரிசிக்க குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்து வந்த வண்ணம் இருப்பதாகவும் - இதனால் ஆலய கல்யாண மண்டபத்தில் தினமும் அன்னதானப் பணி இடம்பெறுவதாகவும் பொது மக்களும் வர்த்தக ஸ்தாபனங்களும் இது ஓர் இன்றியமையாத பணியாக இருப்பதால் தினசரி அன்னதானப் பணிக்கு முடிந்தஅளவு உதவியளிக்க முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே சமயம் உற்சவ காலங்களில் இடம்பெறுவது போன்று இம்முறையும் அமுதசுரபி தனது யாத்திரிகர்களுக்கான அன்னதானப் பணியை சிறந்த முறையில் மேற்கொள்ளத் தயாராகியுள்ளதென அமுதசுரபி நிர்வாகிகள் கூறினார்கள். (க-111-7)

## கணவனும் மனைவியும் விபத்தில் காயம்

அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம் ஞாயிறு மாலை இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கணவனும் மனைவியும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் பிறவுண் வீதியைச் சேர்ந்தவர்களான ம.சிவம் (வயது 48), சி.இந்திரா (வயது 45) என்போரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் இவர்களுடன் சென்ற இவர்களின் பிள்ளைகள் இருவரும் காயங்கள் எதுவுமின்றி தப்பிக்கொண்டனர். (அ-4)

## வலி.கிழக்கில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 'உ' பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு, புதிய அட்டைகள் வழங்கப்படுகின்றன.

எனவே இப்பிரிவில் 'உ' அட்டை வைத்திருப்பவர்கள் தமது பிரிவு கிராம உத்தியோகத்தரிடம் பழைய அட்டைகளைச் சமர்ப்பித்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் புதிய பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க-72)

ராஜா யாழ்ப்பாணம்
பிரபுதேவா, சரத்குமார், ஜெயாசீல், ஐஸ்வர்யா, கபாலி, விவேக் மற்றும் பலர் நடித்த
பெண்ணின் மனதைத் தொட்டு
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (பு.நே.)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
நாளை முதல்
சிட்டிசன்
(C/17600)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த
வானவில்
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
(89189)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
30 - 10 - 1945

மறைவு
06 - 05 - 2001

# அமரர் கனகையா நந்தகுமார்

(நிர்வாக முகாமையாளர், 'உதயன்' பணிமனை)

*வாசல் வந்து வழியனுப்பிவிட்டு*
*வருவீரெனப் பார்த்திருந்த வேளையிலே*
*இடியென ஒரு செய்தி எம்*
*இதயத்தினைப் பிளந்தது வே!*
*தானைத் தலைவா இன்று நீ*
*தரணியிலேயே தலை சாய்ந்தனையோ?*
*ஊர் கூடி உன்புகழ் பாடி*
*உனைச் சுமந்து செல்கையிலே*
*பார்பிளந்து கொண்டது போல்*
*பரிதவிக்கின்றோம் இங்கு நாம்!*

எமது குடும்பத்தலைவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும், குறிப்பாக 'உதயன்' நிர்வாக இயக்குநர் மற்றும் 'உதயன்' ஸ்தாபன ஆசிரியர், பணியாளர்கள் அனைவருக்கும் பரி.யோவான் கல்லூரி அதிபர், கல்லூரிச் சமூகத்தினருக்கும் பல வழிகளிலும் உடன் நின்று உதவிபுரிந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதி திரு.தி.மகேஸ்வரன் அவர்களுக்கும், கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவையினருக்கும், யாழ்.றோட்டறிக் கழகத்தினருக்கும், யாழ்.மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினர் மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த நிறுவனங்கள் - அமைப்புகளைச் சேர்ந்தோருக்கும், நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினருக்கும், இரங்கல் உரை நிகழ்த்திய அனைவருக்கும், தொலைபேசி ஊடாகவும், கடிதம் மூலமாகவும், தந்தி மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும், பிரசுரங்கள் மூலமாகவும் மற்றும் மலர் மாலைகள், மலர் வளையங்கள் சாத்தியும் அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் செலுத்திய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*37, முதலியார் வீதி,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*

(C/17143)

\- குடும்பத்தினர்.

## வாழ்த்தி வணங்குகின்றேன்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய
ஆதீனகுரு
சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்
அவர்கள் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாகத்
தெரிவாகியதையிட்டு அவரை மனதார
வாழ்த்தி வணங்குகின்றேன்.

*"கிருபாபதி",*
*நயினாதீவு-5.*

(89192)

\- கி.கிருபானந்தா.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02 - 04 - 1927



மறைவு
10 - 07 - 1999

உரும்பிராய் கிழக்கு
### சின்னத்தம்பி இராசரத்தினம்

திதி: 19.06.2001 செவ்வாய்
ஆனி, அபரபக்கம், திரயோதசி

பரத்தினது பதம் அடைந்தீர்
சிரத்தையொடு நாம் வாழச்
சீரான வழி செய்தீர்
கருத்தினொடு கற்பகனார்
திருக்கோயிற் பணி புரிந்தீர்,
இரத்தினண்ணை என்றவர்கள்
இரு கண்ணால் நீர் சொரியப்
பரத்தினது பதமடைந்தீர்!
பாவிகளோ நாமிங்கே?

எங்கள் குடும்பத்தின் தலைவரே தாங்கள்
இயற்கை எய்தி ஆண்டுகள் இரண்டே
எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் தங்களது
நினைவு எமது மனத்தில் நீங்காது நிலைத்து நிற்கும்!

*"மஞ்சுளா இல்லம்",*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

(89190)

மனைவி, மக்கள்,
மருகர், பேரர்.





நேற்று யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றிய தென்னிலங்கை சர்வமதக் குழுவினரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். அவர்கள் மத்தியில் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் உரையாற்றுகிறார்.

# ஜானக பெரேராவின் நியமனத்தை ஆட்சேபித்து நேற்று ஆர்ப்பாட்டம்!

## ஆஸி. நாடாளுமன்றத்துக்கு வெளியே தமிழர்கள் திரண்டனர்

கன்பெரா,ஜூன்19

ஆஸ்திரேலிய நாட்டுக்கான இலங்கைத் தூதராக முன்னாள் படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை நியமிப்பதற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்து ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு வெளியே ஈழத் தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சுமார் நானூறு தமிழர்கள் நாடாளுமன்றத்திற்கு வெளியே திரண்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தீவிர பங்கு வகித்து ஓய்வு பெற்றுள்ள தளபதி ஜானக பெரேரா தமிழ் மக்களுக்கு எதிரான பெரும் மனித உரிமை மீறல்கள், அட்டூழியங்கள், சித்திரவதைகளில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் என்றும்-

எனவே அவரது இராஜதந்திர நியமனத்தை ஆஸி.அரசு நிராகரிக்க வேண்டும் என்றும் -

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குரல் எழுப்பினர்.

சிட்னி, மெல்பேர்ன், கன்பெரா ஆகிய நகரங்களில் இருந்து வந்து ஒன்று திரண்ட தமிழர்கள் முதலில் அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் இருந்து நாடாளுமன்றம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

'ஆஸ்திரேலியாவே! ஈழத்தமிழர்களுக்கு உதவு!' என்று அவர்கள் கோஷம் எழுப்பிச் சென்றனர்.

ஜானக பெரேராவை தூதராக ஆஸ்திரேலியா ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவர் கட்டளைத் தளபதியாக இருந்த சமயமே குடாநாட்டில் அறுநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமற்போயினர். இதனை சர்வதேச மன்னிப்புச்சபையே கூறியுள்ளது என்று ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ் அமைப்புகளின் சம்மேளனத்தின் பேச்சாளர் பரராஜசேகரம் தெரிவித்தார். (ஐ-ஒ-4)

## ரணிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த ஓரிரு தினங்களில் அவர்களுக்கு இடையே உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் - ஐ.தே.கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பான விவரங்களை முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் மறுக்கவில்லை. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய மறுத்தன. (ஐ-3)

## லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள ஈலிங் பொலீஸார், சம்பவம் தொடர்பான விவரங்கள் தெரிந்தவர்களை அது பற்றித் தம்முடன் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

மன்னார் மற்றும் அரியாலைப் பிரதேச இளைஞர்கள் அணி பிரிந்து மோதலில் ஈடுபட்ட பல சம்பவங்கள் கடந்த சில வாரங்களில் லண்டனில் இடம்பெற்றுள்ளன.

ஒருவாரத்துக்கு முன்னர் இடம்பெற்ற மோதலின் போது ஈழத்தமிழர் ஒருவருக்குச் சொந்தமான கடை ஒன்றும் காரும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

லண்டன் திரையரங்கு ஒன்றில் 'சிற்றிசன்' என்னும் தமிழ் சினிமாப் படம் பார்க்கச் சென்றிருந்த வேளையும் இந்த இரு இளைஞர் கோஷ்டிகளும் அங்கு அடிதடியில் இறங்கிப் பெரும் களேபரத்தை ஏற்படுத்தியதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

(ஐ-4-164)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
குங்குமப் பொட்டுக் கவுண்டர்
அல்டி
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/17149)

ஸ்ரீ செல்வா சினிமா
யாழ்ப்பாணம்
தினசரி 10.30 - 2.30
(பழைய நேரம்)
சத்தியராஜ், ரம்பா, கரண்,
கௌசல்யா, கவுண்டர்
நடித்த
குங்குமப் பொட்டுக் கவுண்டர்
புதிய வெளியீடு (நேரடி CD)
(89195)

# ஆஸ்திரேலிய தலைநகரில் செம்மணி புதைகுழி காட்சிகள்

கன்பெரா,ஜூன்19

யாழ்ப்பாணத்தில் செம்மணியில் இடம்பெற்ற படுகொலைகள், புதைகுழிகள் தொடர்பாகத் தான் நேரில் சென்று திரட்டிய தகவல்களையும், ஒளிப்படத் தொகுப்பையும் ஆஸ்திரேலிய நாட்டு தடயவியல் நிபுணர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படுகொலைகளுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் படைத்தளபதி ஜானக பெரேரா ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படவிருக்கும் சமயத்தில் செம்மணிப் புதைகுழி தொடர்பான விவரங்கள் அங்கு செய்தியாளர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் காண்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று தலைநகரில் நடைபெற்ற பேரணியின் போதும் செம்மணிப் புதைகுழிப் படக்காட்சிகள் அங்கு காண்பிக்கப்பட்டன. (ஐ-ஒ)

## தெற்கு மக்களின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

அதன் பின்னர் அங்கு உரையாற்றிய பேராசிரியர் வண. வஜிர தேரர் கூறியதாவது:-

இன்று நாட்டில் பெரும் பிரச்சினையாக தமிழ் மக்களின் பிரச்சினை உருவெடுத்தமைக்கு மூல காரணம் அரசியல்வாதிகள்தான். அவர்கள் தமது அரசியல் வாழ்க்கைக்காக இந்தப் பிரச்சினையைத் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தினர்.

இதன் காரணமாக யுத்தம் மூலமே சமாதானம் ஏற்படவேண்டும் என்ற சிந்தனை தெற்கில் வேரூன்றியது. 1980களில் இதே நிலைதான் அங்கிருந்தது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.

தெற்கில் 95 சதவீதமானவர்களும் பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் காணவேண்டும் என்றே விரும்புகின்றனர். யுத்தத்தை அவர்கள் வெறுக்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும். அதன் மூலம் நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்ட வேண்டியது அவசியமாகும். இந்த விடயத்தில் இரு தரப்புக்களான அரசும் புலிகளும் மனம் விட்டுப் பேச முன்வரவேண்டியது அவசியம் - என்றார்.

சர்வமதக்குழுவின் தலைவரான வண. வடினாபாக சோமானந்த தேரரும் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள வவுனியா விகாராதிபதி வண. சியாம்பல விமலசார தேரரும் இதே கருத்தை வலியுறுத்திப் பேசினர்.

(ஐ-3-5-6)

## 15 பிரதிநிதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்குகளும், இரு இந்துக் குருமார்களும், மூன்று கிறிஸ்தவ மதகுருமாரும், முஸ்லிம் மௌலவி ஒருவரும், 6 பத்திரிகையாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் யாழ்.ஆயர் இல்லத்துக்குச் சென்ற இந்தக் குழுவினர் பின்னர் அங்கிருந்து யாழ். பெரிய கோயில், சென்.ஜேம்ஸ் தேவாலயம், யாழ்.பள்ளிவாசல், நாக விகாரை ஆகிய இடங்களுக்கும் சென்றனர்.

இந்தக்குழுவினர் இன்று காலை பெருமாள் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில் உட்பட பல ஆலயங்களுக்கும் செல்வர்.

இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலிலும் அவர்கள் பங்குபற்றுவர்.

எதிர்வரும் வியாழக்கிழமை வரை இங்கு தங்கவுள்ள சர்வமதக்குழுவினர் நாளையும் நாளை மறுதினமும் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்.வந்துள்ள சர்வமதக்குழுவுக்கு இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் சமயப்பிரிவின் ஆலோசகரான வண.வடினாபாகே சோமானந்த தேரர் தலைமை வகிக்கிறார்.

இந்தக்குழுவில் நெடக்கமவ விஜமாத்ததிர தேரோ, சியாம்பல விமலசார தேரோ, கதொட நாயனகல விமல தேரோ, பலப்புல நந்த தேரோ, கலாபகனபியரத்ன தேரோ, யாலி யத்தோந்த உபாலி தேரோ, வால்பன சோமானந்த தேரோ மற்றும் வண.பிதாக்கள் அன்ரனி சிறில், ஈ. அருண், சரத் கெட்டியாராய்ச்சி, இந்துக் குருக்களான மோகன்சர்மா, பி.கே.எம்.சர்மா ஆகியோரும் மௌலவி சுபியான் மற்றும் பத்திரிகையாளர்களான எஸ்.கணேசன், டி.விக்கிரமசிங்க, எஸ்.பெரேரா, ஏ.மனமேந்திரா, பி.எம்.யு.நிசாந்தா, டி.குணரத்ன ஆகியோரும் இந்த சர்வமதக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். (ஐ-3-5-6)

### போர்க்காலக் குற்றங்களுக்காக

# ஜானகவை நீதிமன்றில் நிறுத்தத் தயங்கோம்!

## ஆஸி. தமிழர் பிரதிநிதி கூறுகிறார்

லண்டன்,ஜூன்19

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக ஜானக பெரேரா நியமிக்கப்பட்டதை ஆஸ்திரேலிய அரசு ஏற்குமானால், சட்டரீதியான நடவடிக்கைகள் மூலம், அவரைப் போர்க்காலக் குற்றங்களுக்கான விசாரணை மன்றத்தில் நிறுத்தத் தயங்கமாட்டோம்.

இவ்வாறு தென்துருவத் தமிழ்ச் சங்க சம்மேளனத்தின் விக்டோரியா மாநிலப் பிரதிநிதி மனோ நவரத்தினம் தெரிவித்தார்.

நேற்று இரவு பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்தோனேசியாவில் இராணுவத் தளபதியாக இருந்த ஒருவர் இதே போல் ஆஸ்திரேலியாவுக்கான இந்தோனேசியத் தூதராக நியமிக்கப்பட்டதாகவும் -

ஆனால் அப்போதிருந்த ஆஸ்திரேலிய அரசு, அந்த நியமனத்தை ஏற்க மறுத்து விட்டதாகவும் -

கிழக்குத் திமோர் மக்களுக்கு எதிராக இந்தோனேசிய இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது, அவற்றில் நேரடியாகப் பங்கு பற்றாத போதும், அந்த இராணுவத்துக்கு தலைமை வகித்த காரணத்துக்காகவே அந்தத் தளபதியைத் தூதராக ஏற்க ஆஸ்திரேலிய அரசு மறுத்ததாகவும் -

அப்பேட்டியில் மனோ நவரத்தினம் சுட்டிக்காட்டினார்.

ஜானக பெரேரா தூதராக நியமிக்கப்பட்டதும் அது போன்றதே என்று ஆஸ்திரேலியத் தமிழர்கள் சுட்டிக்காட்டியதை ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ)

### மாவட்ட மட்டப் போட்டிக்காக

# யாழ். கிரிக்கெட் அணி இன்று தெற்கே விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் மாத்தளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில்-19 வயதுக்குட்பட்ட பிரிவு அணிகளுக்கிடையில் இன்று ஆரம்பமாகவுள்ள மாவட்ட மட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்ட அணி இன்று இங்கிருந்து கப்பலில் புறப்படுகின்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இங்கிருந்து செல்லும் அணியினர் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் மூன்று ஆட்டங்களில் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்.மாவட்ட அணிக்கு எஸ். சிவசங்கர் தலைமை வகிக்கிறார். அணியின் உதவித் தலைவராக பி.லவேந்திரா இருப்பார்.

எஸ்.சிற்சபேசன், கே.பிரகாஷ், கே.றோஹான், வி.ரஜீவ்குமார், ஏ.ஆர். சேர்ச்சில், ரி.றோசான்டனி, பி.ஸ்கந்தன், எஸ்.குணதாஸ், என்.அன்பழகன், சி.அகிலன், ஆர்.கிருஷ்ணராசா, எஸ்.வினோத்குமார், வி.விஷ்ணுவரதன், பி.சிவாஸ்கர், எஸ்.பிருந்தாவன் ஆகியோர் அணியில் இடம்பெறும் ஏனைய வீரர்கள் ஆவர்.

அணியின் பயிற்சியாளர் வி.கே. சண்முகலிங்கம் மற்றும் முகாமையாளர் எம்.ஜே.பெனிடஸ் ஆகியோரும உடன் செல்கின்றனர்.

மாத்தளையில் இடம்பெறும் போட்டிகளில் யாழ்மாவட்ட கிரிக்கெட் அணி எதிர்வரும் 21ஆம், 23 ஆம், 24 ஆம திகதிகளில் முறையே மட்டக்களப்பு அணியையும், திருகோணமலை அணியையும், வவுனியா அணியையும் எதிர்த்து ஆடவுள்ளது.

(ஐ-ஒ-3)

## எங்கும் செல்வோம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் பிரமாண்டமான அளவில் வாசகங்கள் காணப்படுவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஏறாவூர், செங்கலடி மற்றும் வந்தாறுமூலை ஆகிய பகுதிகளில் இராணுவ ரோந்து தீவிரப்படுத்தப்பட்ட வீதிகளிலும் இராணுவ முகாம்களுக்கு அண்மித்த பகுதிகளிலும், இயந்திரம் மூலம் இயங்கும் 'ஸ்பிரே' கருவியைப் பயன்படுத்தி வரையப்பட்டுள்ள இந்த வாசகங்களை பொதுமக்கள் ஆச்சரியத்துடனும், இராணுவத்தினர் உணர்ச்சியற்ற முகங்களுடனும் பார்த்தபடி கடந்து செல்வதாக 'தமிழ்நெற்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பஸ் நிலையம் ஒன்றில் வரையப்பட்டுள்ள வாசகங்களை படத்தில் காணலாம். (ஐ-ஒ)

## தீர்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிய கலந்துரையாடல் நேற்று யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே ஆயர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஆயர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணலாம் என்ற நிலையை நீக்கச் சகலரும் முன்வர வேண்டும். யுத்தம் மூலம் அழிவுகள் தான் மிச்சம். வேறு எதுவும் கிடைக்கப்போவதில்லை. எனவே சமாதானத்தை எட்ட அரசு புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும். இதற்கு மதத் தலைவர்கள்தான் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

நேற்றைய கலந்துரையாடலில் உரையாற்றிய வணபிதா. ஐ.பேர்னாட் அடிகள் -

தெற்கில் உள்ளவர்கள் யுத்தம் வேண்டும் என்றும் யுத்தம் வேண்டாம் சமாதானம் வேண்டும் என்றும் போராட்டங்களை நடத்துகின்றனர். அதற்கான சுதந்திரம் அவர்களுக்கு உண்டு ஆனால் இங்கு தமிழ்மக்கள் தமது உரிமையைக் கோரி போராட்டம் நடத்தக்கூடச் சுதந்திரம் இல்லை - என்று தெரிவித்தார்.

சர்வமதக் குழுவின் பிரதிநிதிகளும் அங்கு உரையாற்றினர்.

(ஐ-3-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.